# ஒரு குடை ஒரு காதல்

வயவை லம்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடை ஒரு காதல்

வயவை லம்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்

கவிஞர் எழுத்தாளர் நாவரசன் செல்லத்துரை
(ஐபிசி பிரசவகளத் தொகுப்பாளர்)
வயவையூரான் கவிமணி அன்னைதாசன்
மதுரகவி மோகநாதன் செல்லையா


**ஒரு குடை ஒரு காதல்**

வயவை லம்போ

மூன்றாம் பதிப்பு : சித்திரை 2025

வெளியீடு: வயாவிளான் மக்கள் ஒன்றியம் & ஜீவநதி, அல்வாய்

பதிப்புரிமை : வயவை லம்போ

அட்டைப்பட வடிவமைப்பு : வயவை லம்போ

பக்க வடிவமைப்பு : க.பரணீதரன்

அச்சுப்பதிப்பு : பரணீ அச்சகம், நெல்லியடி

பக்கம்: 122

விலை : 600/-

Oru Kudai Oru Kathal

Vayavai Lambo

First Edition : April 2025

Published by: Vayavilan Makal ontriam & Jeevanathy, Alvai

Copy Rights : Vayavai Lambo

Cover Designed by : Vayavai Lambo

Page setup : K.Bharaneetharan

Printed by : Baranee printers, Nelliady

Pages: 122

Price : 600/-

ISBN: 978-624-6601-72-0

ஜீவநதி வெளியீடு - 442





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சுப்பிரமணியம் நீலாம்பிகை

மூன்றெழுத்தில் நிரம்பிய தெய்வங்களே
இல்லறத்தில் வாழ்ந்த உன்னதங்களே
சொல்லறம் கொண்டு வணங்குகின்றேன்
இங்ஙனம் நான் செதுக்கிய இந்நூலை
உங்களின் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

வயவை மண்ணின் வாலிபக் கவிஞன், உயர்வை எண்ணி உழைக்கும் உத்தமன், வியர்வை சிந்தும் பாட்டாளியைப் பாடுபவன், ஊருக்கு உழைத்தவரை, தமிழுக்காய் வாழ்ந்தவரை, விடுதலைக்கு வித்திட்டவரை, விடாமல் நினைக்கும், மறவாமல் நினைக்கவைக்கும் கவி தந்தோன். புதுமையில் பழமையைக் காத்திடும் கவிஞன், கள நிலவரத்தை கண்முன்னே காட்டும் உளத்திறன் உடையோன், தான் பிறந்த மண்ணை தன் பெயருக்கு முகவரியாக்கியவன்.

இலண்டன் ஐபிசி வானொலியின் பிரசவகளத்தில், வாரம்தோறும் வந்து கவி தந்திடும் கவிஞன், சோர்வே அறியாத் தமிழர் தானையின் சாதனையெல்லாம் சரளமாய்க் காட்டும் பிரசவகளத்தில் பிறந்த குழந்தைக்கவி - வயவை லம்போ இன்று தனியோர் கவி உலகம் படைப்பதை எண்ணி உள்ளம் மகிழ்கிறேன் பிரசவகள தாயாய்.

தாயகத்தில் வளமாக வாழ்ந்த தமிழர்தம் காதல் வாழ்வின் வழி சொல்லி, பின்பு வலி சுமந்து வாழ்ந்த வாழ்வையும், போரையும், துரோகத்தையும், தீர்வையும், இன்றும் தேடும் இனிய வாழ்வையும் எடுத்தியம்பி, சரித்திரத்தின் தேவையைப் பதிவாக்கியுள்ளார். ஈழத்தவரின் கடந்த முப்பத்தைந்தாண்டுகால வாழ்வியலை மீள் நோக்கி நகர்கிறது அவரின் "ஒரு குடை ஒரு காதல்" ஆழ வேரூன்றி உலகெலாம் சூழ வாழ்ந்த மொழி, உயிர் மொழி தமிழென்று தமிழ்மேல் காதல் கொண்டு உரத்துக்கூறும் கவிஞர்

"ஊருக்கும் பாருக்கும்
தாய் நானென அறிவாய்
கல்லையும் பிடுங்கிப்பார்
அதன் வேரிலும் எனை அறிவாய்"

என "உயிர்மொழி" எனும் தலைப்பில் தீட்டிய கவிதையில் கூறுபவர், சிறப்பொலி எழுத்திலேந்தி தரணியில் நிலைத்த மொழியென தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியின் தொன்மையும், முதன்மையும், இன்றும் வாழும் தன்மையும் சொல்லி, தமிழின் வேரைத் தேடும் இன்றைய எம் சந்ததியையும் நினைக்கவைக்கின்றார் "என் திருமொழி" எனும் கவியில்.

"சோழ பாண்டியர் கொடியில்
பட் டொளி வீசிய வீரமொழி
சூழப் பகைவன் வருகின்
சங்காரம் நடத்தும் புலிமொழி".....

"சிறப்பொலி எழுத்திலேந்தி
தரணியில் நிலைத்த மொழி
மறத்தமிழர் துடிப்பினிலே
வாழ்வாகும் செம்மொழி"

என்று தூய தாய்மொழியை தெய்வீகமொழி என்றவர், தமிழ் மொழிக்குத்தொண்டு செய்த பெரியோரையும், தாயின் பெருமை யையும், தாய் நிலத்தின் அருமையையும் பாடத்தவறவில்லை. மண் மணம் மாறாமல் மண்ணில் வாழ்ந்த காலத்து நினைவுகளை கவியில் நிசமாக்கியுள்ளார்.

"பயிர் விளைச்சலுக்காய்
பராபரன் படைத்தநிலம்
அந்தப் பலாலிக் கடலோரம்
பசுமையோடு துலங்குமிடம்"...

"வடலிப் புதருக்குள்ளே மெல்ல
பதுங்கும் முயல்பிள்ளை பொழுது
இருட்டிப்போக ஆடுமாட்டோடு
போகும் ஆச் சி சின்னப்பிள்ளை"

"மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கம் இனி உண்டோ" என பாரதி தன் கவியில் பொங்கியது போல், வயவை லம்போ சாதிய, இன பிரிவினைகளுக் கெதிராக தன் கருத்தைப் பதிவு செய்கிறார்.

"ஆதிவாசி வாழ்ந்து வந்த முறை
மீண்டும் வந்து சேராதோ?
சாதி என்ற சாக்கடையை அவன்
அறிந்ததில் லைத் தெரியாதோ?"

சமரச வாழ்வு நாம் மீண்டும் வாழ்ந்திட முடியாதோவென்ற ஏக்கத்துடன், பாதிகாலத்தில் வந்த நாகரீகம் மீதிகாலத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் வாழ்வியலைச் சிதைக்கும் நிலைகண்டு "பழங்குடி" எனும் தலைப்பில் பதிவிட்ட கவியில் பொங்கி நிற்கின்றார்.

அணுகுண்டு கொண்டு இப்பாரை ஆள்கின்ற இந்நாளில் நாமிங்கு அன்பினால் உலகை ஆளலாம் என்று இன்பக்கவி பல தந்து ஈர்த்துள்ளார் வயவை லம்போ. காதலுக்காய் ஓங்கி ஒலிக்கும் கவிஞர் உள்ளம் "பூரணமானவள்" என்ற கவிதையில்,

"விழி அசைவில் நூறுகவி சொல்லும்
பாவை வழிப் போக்கில்
எனைத் தடுமாற வைத்த பார்வை
கிளிப் பேச்சு பேசி எனை
கிறங்கிடத்தான் வைத்தாள் கோதை".....

"காதலொரு யுத்த பூமியென்பேன் - அங்கு
மலர்களே ஆயுதம் என்பேன் - அவள்
காதலாகி என் வாசல் வந்தால்
ஆயுள் புனிதமென்பேன் அவள்கூட
வாழ்ந்துவிட் டுச் செத்தால் இன்பமென்பேன்"

காதல் இன்பம் கனிரசமாய்த் தந்தவர். அன்பு மீறும் இடங்களையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டி வாழ்வியலின் யதார்த்தத்தை காலத்தின் கண்ணாடியாய் காட்டியுள்ளார். தாய் நிலத்துக் காதலும் புலம் பெயர் காதலும் நடைமுறையில் உள்ள நிலை அப்படியே பாடியுள்ளார்.

அன்றைய காதலின் உண்மையும் உணர்வும் இன்றி இன்றைய காதலெனும் பெயரில் உரைக்கும் பொய்மையும் போலித்தனமும் காதல் காலாவதியாகியதா என கவிஞரை எண்ணவைக்கின்றது.

"உள்ளத்துள்ளது கவிதை உணர்ச்சி
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் அதனைத்
தீட்டி விடுப்பது கவிதை"

என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் கூற்றுக்கு அமைய தனது உள்ளத்தின் ஆழத்தில் உள்ள உணர்ச்சிகளை அப்படியே கவி வரிகளாய் பல இடங்களிலும் பதிவாக்கியுள்ளார் வயவை லம்போ. பல கவிகளில் அரசியல் சொல்பவர். காதலின் ஊடல், தேடல், தோல்வி, துரோகம், பிரிதல், சேரல் என எல்லா வற்றுக்கும் கவி தந்துள்ளார். அனுபவ அறிவால் பட்ட துயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்த பின் வரும் தத் துவத்தையும் சொல்லத்தவறவில்லை.

"என் கையில்
ஒரே ஒரு குடைதானிருக்கிறது
எனக்குள் நீ நெருங்குவாய்
என்ற நம்பிக்கையில்".....

"தீ தானாக
எரியாது அல்லவா?
காற்றின்
கரிசனையும்
கொஞ்சம்
அவசியம் தானே".....

"நா எனும் பாம்புக்கு
நடுங்கி நீ போவதென் ன?
பொறாமை போட்டி என்று
வெறுப்பதால் கண் டதென்ன?"

என "உனக்கென்ன" எனும் தலைப்பில் தீட்டிய கவியில் மேலும்

"கடவுள் கட்டளை இட்ட
பிறகு கெஞ்சி என்ன?
நீ செத்தபிறகு மண்ணில்
உன் மிச் சம் என்ன?"

என வாழ்வின் நிலையாமையையும் நிரந்தர தன்மையையும் வேறுபடுத்தியறியத் தூண்டுகிறார்.

"சொற்புதிது, பொருள்புதிது, சுவைபுதிது சோதிமிக்க நவகவிதை" என்பான் புரட் சிக்கவி பாரதி, அவன் வழியில் அவன் நினைவைப் பதிவாக்கியுள்ளார் கவிஞர் "முண்டாசுக் கவிஞன்" எனும் தலைப்பில்.

"நாட்டு மக்களுக்கு
விடுதலை கேட்டவன்
வீட் டுப் பெண்களுக்கும்
அது வேண்டும் என்றவன்"
..............................
"பழமையைக் கொழுத்த
பிறந்த தீ அவன்
புதுமை செய்யெனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் புகுத்தியவன்"

இவ்வாறு இதில் வரும் பல கவிதைகளிலும் மண் விடுதலை, பெண் விடுதலை பேசும் கவிஞர் மூட நம்பிக்கைகளை முழுவதுமாய் இல்லாதொழிக்க வேண்டும் எனவும் சாடியுள்ளார்.

எல்லை மீறும் மனிதன் நிறுத்தினால், இயற்கையும் நிறுத்தும். அவரவர் எல்லையில் அவரவர் நின்றால், பூமியின் வாழ் நாள் கூடும் என்று இயற்கையை அழிக்கும் மனிதனையும், மனிதனை அழிக்கும் இயற்கையையும் வைத்து அழகிய கவி தந்துள்ளார் "ஊழிக்காலம்" எனும் தலைப்பில். இன்றைய உலகில் சுனாமியாலும், புயலாலும், தீயாலும் ஏற்படும் அனர்த்தங்கள் ஏன் நிகழ்கின்றன என சிந்திக்கவைப்பதன் ஊடாக உள்ளுறையாய் அவர் தெளிவிக்க வரும் அரசியல் விடயம் சிறப்பானது.

"எங்களின்
வாழ்க்கைக் குளத்தில்
தண்ணீரைக் காட்டிலும்
கண்ணீர்தான்
நிரம்பியிருக்கிறது"

"புதுமைகள் பிறக்கட்டும்" என்ற கவியில்,

"வதிவிட நாடே வளமென்று நாமும்
பதிவுகள் செய்வதைத் தவிர்ப்போம்
புதிதொரு நாடங்கு புலருமானால்
புதியதை அங்கு பிரசவிப்போம்"....

"ஆண்டு செழித்தவர்களின் ஆணிவேர்
புதைந்து கிடக்கிறது
ஒரு நாள் முகவரி புலப்படும்"....

ஊரோடு உறவெல்லாம் வேரோடி வாழ்ந்ததுவும், பாரோடிப் போனதுவும், வேரறுந்து நின்றதுவும், யாரோடு நோகவென்று மனம் நொடிந்து போனதுவும், ஏரோடு வாழ்ந்த இனம் ஏதிலியாய்ப் போனநிலை எடுத்தியம்பி, காதலும் வீரமும் கொண்டு வாழ்ந்த தமிழரினம், துரோகிகளால் பட்ட துன்பத்தையும் பாடி, பொறுத்து வாழ்ந்து, பொறாமை தவிர்த்து, நன்மை செய்து, பண்புடன் வாழ்ந்தால் பாரையும் ஆளலாம், விவேகத்துடன் வாழ்ந்தால் இன்னும் காதலையும் வீரத்தையும் வென்றிடலாம் என்று இன்றைய வாழ்வின் யதார்த்தத்தை, அன்புகொண்டு வாழும் அருந்திறத்தை அழகாய் கூறியுள்ளார். ஆண் பெண் காதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாச் சொல்லி, மண் விடுதலைக் காதலை மிடுக்குடன் கூறி, ஒரு குடையின் கீழ் எல் லாக்காதலையும் குவித்துள்ளார் கவிஞர்.

ஒரு குடையின் கீழ் ஒரு காதலால் ஒன்று படுவோம் வாரும் என்று அழைத்து நிற்க்கும் வயலை லம்போவின் அத்தனை கவிதையையும் அள்ளிப் பருகுங் கள்.

செல்லத்துரை நாவரசன்
London IBC தமிழ் வானொலியின் முன்னாள்
பிரசவகள நிகழ்ச்சித் தயாரிப் பாளர், தொகுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயவை லம்போ நீ கவியெழுதி வாழ்க

எமது ஊரின் பெயர் வயாவிளான். வசாவிளானல்ல! வயவர் என்ற அடிநாதத்திலிருந்து வந்தது வயவர் - வீரர். மறவர் அரசர்க்கு மெய்க்காப்பாளராக வீரர்களாக இருந்தவர்கள் எம்மவர். இதன் வழி வந்ததே வயாவிளான்.

அதனை இளசுகள் புரிவார்களாக. அடுத்து உழவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் என்று பலரும் உழைத்து உரமேறிய செம்பாட்டு மண், எம் வீரமண். மிகுந்த ஆழமான, தங்கத் திரவியங்களைக் கொண்டது. எங்கள் கிணற்றுநீர் சுத்தமும், சுவையும் நிறைந்த தீர்த்தம். இவற்றால் வளமேறி உரமேறி வாழ்பவர் நாம். நீர்வளம், நிலவளம், ஆள் வளம், மண் வளம் அனைத்தும் நிரம்பியவர் நாம்.

எங்கள் குறையையும் பகிர்தல் என் கடனாகிறது. திறமைகளை பாராட்டத் தெரியாத மற்றவர்களின் பெருமைகளைப் போற்றத் தெரியாத குறுகிய மனப்பான்மையும் நிறைந்தே வாழ்பவர் எம்மக்கள். ஆம் இன்றுவரை எம் திறமைசாலிகளைப் பாராட்டியதை நான் அறியவில்லை. ஏன்? எங்கள் உலகமகா கவி கல்லடியானுக்கு ஓர் விழாவினை நான் கண்டதில்லை.

இத்தகு மண்ணின் மைந்தர்களுள் வயவை லம்போவும் ஒருவனாகிறான். இவன் பாடியே ஆகவேண்டும். ஏனெனில் உலகக்கவிஞன் கல்லாடியனின் அயல்வீட்டினன். எம் அகத்திலும் சிலகாலம் வசிக்கும் வாய்ப்புப்பெற்றதோடு எம்மோடு வளர்ந்தவன். ஏட்டுப்படிப்பு படித்தவரெல்லாம் கவிஞனாக முடியாது. அதற்காக அதனை எட்டிப்பார்க்காதவர்கள் கூட பெருங்கவிஞர்களாகியுள்ளது. உலகு எமக்கு காட்டி உறைக்க வைக்கும் பாடம்.

இந்தவகையில் கவிஞன் வயவை லம்போ தன் உள்ளத்து உணர்வுகளை அழகிய வரிகளாக்கியுள்ளதை இம்மலரில் ஆவணமாக்க முனைகின்றான். முதலில் எனது வாழ்த்துகள்.

அண்மையில் புலத்தில் ஓர் உறவு என்னை தன் கவிதை வெளியீட்டிற்கு விருந்தினராக அழைத்திருந்தார். இது எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது எம்மூரவரின் வெளியீட்டின் பகிர்வு. இரசிக்கத் தெரியாதவன் கவிஞனாக இருக்க முடியாது. அவனின் படைப்பில் இவை பல வரிகளில் இழையோடுகிறது. சிலவற்வற்றை சேர்க்கலாம் "இலக்கு" எனும் தலைப்பில் குறிக்கோள் இலக்கை அடையும்வரை என்பதை வாசித்துப் பார்த்தால் விளங்கும். "அழகியலில்" அவள் வீதிக்கு வந்தால் வாலிபர்கள் காலி. இதனையும் தொடர்ந்து பாருங்கள். "தாயே தமிழே" என்ற தலைப்பில் நான் என்பதை தீ கொண்டு எரித்து என்று தொடர் கின்றான். ஆக ஆங்காங்கே கவிஞனின் உள்ளத்து வலிகளையும், வாலிபத்தின் இரசனையையும், வீர மறவனின் வார்த்தைகளும் விரவி காணப்படுகின்றன. இப்படியாக பலதைத் தொடலாம். இதனைக்கூட விளங்க முடியா பல பேதைகள் உளர். அவர்களுக்கு இவ்வரிகள் ஏளனமாகவும் படலாம். என் பங்குக்காக

வெட்டுப் பாவடையும் விதவித ரீசேட்டும்
ஒட்டிய ஜீன்ஸ்சும் அணிந்து வரும்
தாயையும் பெண்ணையும் தெரியவில்லை
தமிழ்ப்பெண்ணா இவரென்று புரியவில்லை

இதுவொரு மிக நீண்ட பாடல் கவிமணி அன்னை தாசனின் கவிதைகளில் இதுவும் ஒரு துளி. ஆகவே வயவை லம்போவே நீ கயமையகற்றி கற்றோரை உற்றோரை மதித்து காசினியில் பல படைப்புகள் இதைப்போல எச்சமாக்கி வாழ்க வளர்க.

அன்னையைத்தொழ
அனைத்தும் தருவாள்
வயவையூரான்
அன்னைதாஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வாசித்துக் கொண்டிருக்கின்றேன். ஆகவேதான் நான் முழுமையாக வாசித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஒருவேளை புத்தகப் புழுவாய் தெரிவதால் தானோ என்னவோ எனக்கும் உயிர் இருக்கென்பதை அறியாமல் சிலர் ஏறி மிதித்துக் கொண்டு போகிறார்களா? என்று எண்ணத்தோன்றும் புத்தகப் புழுவை மிதிக்கத்தான் முடியுமே தவிர புதைத்துவிட முடியாது.

புத்தகம் என்பது எங்கள் எண்ணப் பதிப்பகத்தின் கருத்துகளை எழுத்து உருவில் கொடுக்கும் ஒரு கருவியெனச் சொல்லிக் கடந்து போக இயலாது. அது பல வரலாறுகளை அசையாது வைத்திருக்கும் ஆணிவேர்.

வாசித்தல் ஒரு படைப்பாளிக்கு மிக மிக முக்கியமான ஒன்று பார்ப்பது. இரசிப்பது. வியப்பது இவைகள் ஒரு படைப்பாளியின் ஆபத்தற்ற ஆயுதங்கள். இது அனைத்துப் படைப்பாளிகளுக்கும்" பொருந்தும்.

தன்னைத் தூக்கிலிட அழைத்தபோது தான் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தை முடித்து விட்டு வருகிறேன் எனச் சாகும் தருவாயிலும் கூட புத்தகம் வாசித்தவர் மாவீரன் பகவத்சிங்.

வேறு எந்தச் சுதந்தரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் நெல்சன் மண்டேலா.

கைத்துப்பாக்கிகளை விடப் புத்தகங்களே பெரிய ஆயுதங்கள் என்றார் புரட்சியாளர் லெனின்.

இப்படித்தான் தலைவர்களும், அறிஞர்களும் உருவாகினார்கள். உருவாகின்றார்கள். பள்ளிப் படிப்பென்பது அடுத்த கட்ட நகர்வுக்கான வழிகாட்டல். சிறந்த நல்ல புத்தகங்கள்தான் எதிர்காலத் திட்டத்திற்கான அத்திவாரம். வாசிப்பின் பழக்கத்தை வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக வைத்திருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நான் எதிர்காலக் குழந்தை களுக்கு தாழ்மையான வேண்டுகோளாகவே வைக்கின்றேன்.

மண்ணின் வாசனையையும், வாழ்க்கையின் பண்பாட்டு வாழ்வியலையும் பக்கத்தில் இருந்து பருகும் வாய்ப்பை இழந்து வந்ததன் வருத்தம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

உறவுகளின் உயிரோட்டத்தில் முறையோடு அழைத்து உரிமையோடு பழகி எத்தனையோ நாட்கள் கடந்து நட்பாய் கைகோர்த்து, பாசம் பகிர்ந்து, கோபித்தபடி சில நாட்கள், புன்னகைத்த வண்ணம் பல நாட்கள் என்று வேறுபட்ட ஒரு கோணத்தை எம்முடன் சுமக்காமல் மனித அன்பை மாத்திரம் மூச்சில் வாங்கிக் காலத்தை கடந்து கால்கள் பயணித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் தனிமைப்படுத்தி வலிமையோடு வாழ்ந்து நமக்கு நாமே ஆசுவாசப்படுத்தி ஆறுதலாக எங்களைத் தடவிக் கொடுத்து இழப்புகளையும் இன்னல்களையும் எதிர்கொண்டு எழுந்திருக்க முடியாதளவு தடைகள் வந்து மூடிக்கிடந்தாலும் முட்டி மோதி மறுபடியும் மீண்டெழுந்து வாழ்க்கையை வாழ வருகின்றோம்.

எதிர்பாராத ஒரு உறவின் வருகை, அல்லது நட்பின் விருந்தோம்பல் இதுவரை தெரியாத, பழகாத ஒருவரின் சந்திப்பு அவர் மீது ஏற்படும் நம்பிக்கை, நிறைவான நேசம், இதமான நினைவுகள், மறந்தும் கடந்து போக இயலாத காயப்பட்ட சுவடுகள், இவைகளெல்லாம் இணைந்து பிரசவமானதுதான் இந்த "ஒரு குடை ஒரு காதல்."

காதல் ஒரு தொன்மையான உயரிய இடத்தில் இருந்து பிறந்த பிஞ்சுக் குழந்தை. அது ஆண்டுக்கணக்கின்படி பழசாக இருந்தாலும், எப்பவும் எம்மோடு பின்னிப் பிணைந்து தன்னைப் புதுபித்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

காயாத கண்ணீரின் ஈரம், மனதளவில் மாறாத மயக்கம், தெளிவற்ற வாதங்கள் மனிதனோடு இடிபட்டுக் கொண்டு வாழ்க்கைப் பாதையில் வலிகளைச் சுலபமாக வீசிவிட்டு நகர்ந்து கொண்டிருப்பது இன்றைய மக்களின் வாழ்வியலின் இயல்பாகவே மாறிவிட்டது.

இந்த அவசரகாலம் இட்டுச் செல்லும் பாதையில் இயற்கையின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு, காற்றின் முதுகில் சவாரி செய்து, கடலலையின் இரைச்சலையும் இரசித்தபடி, ஈரமணலில் காலடியைப் பதிய வைத்து மாறாத பழைய மரபுக் காதல் ஆங்காங்கே தென்படட்டுக் கொண்டிருந்தாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன உலகம் காதலை எளிதாகச் சொல்லும் அளவுக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்றால் காதல் ஒழிவு மறைவின்றி அங்கீகரிக்கப்பட்டு விட்டதென்று அர்த்தம்.

இந்த என் கவிதைத் தொகுப்பில் ஒரு கவிதையேனும் உங்களுக்கானதெனத் தோன்றினாலோ, அல்லது இது என் காதல் எனச் சொல்லிக் கொண்டாடுபவர்கள் உண்டென்றாலோ அதுவே இத் தொகுப்பிற்கு கிடைத்த தரமான வெற்றியெனக் கருதிப் பெருமகிழ்வடைவேன்.

எனது இத்தொகுப்பின் பிரசவத்தை சுகப்பிரசவமாய் நான் பெற்றெடுக்க என் தோளோடு தோள் நின்று உழைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். இனிய வாசகப் பெருமக்களே நீங்கள் ஒரு குடையோடு உள்ளே போனால் ஒரு காதலோடு வெளியே வருவீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

வயலை லம்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


1. இலக்கு / 17
2. பணயம் / 19
3. வாழலாம்... வா / 21
4. முண்டாசுக் கவிஞன் / 23
5. சத்தமில்லாது தூங்க வேண்டும் / 25
6. கொஞ்சிக் கொஞ்சி / 26
7. தூயகாதல் / 28
8. புல்லாங்குழல் பூ பூத்தது / 30
9. விருப்புக் கோரிக்கை / 32
10. என் காதல் இப்படித்தான் / 34
11. ஊழிக்காலம் / 36
12. சாளம்பாய் / 40
13. தாயே தமிழே / 42
14. என் திருமொழி / 44
15. அன்பே சிவம் / 46
16. அழகியல் / 48
17. அவள் காதல் அசதியில் உறங்குகிறாள் / 50
18. அவனுக்கும் அவளுக்கும் இடையில் / 52
19. கடந்து போகலாம் / 56
20. சட்டென்று காதலாகு / 58
21. ஆணிவேர் / 61
22. உனக்கென்ன / 63
23. எந்த கங்கையில் இந்த பாவம் தொலைப்பீர் / 65
24. புதுமைகள் பிறக்கட்டும் / 67
25. பனிவானம் / 68
26. உயிரே எங்கிருக்கிறாய் / 71
27. உணர்வின் தாகம் / 74
28. ஒரு குடை ஒரு காதல் / 76
29. என் எதிரே தோன்றினாய் / 78




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. பழங்குடி / 80
31. நித்திரை / 82
32. வாழ்க்கை போன போக்கு / 86
33. மானிட ஆளுமை / 88
34. வரலாறு என்னாகுமோ / 90
35. கண்ட நொடியில் / 92
36. காதலாகி / 94
37. காதல் குறும்பு / 96
38. சினேகிதி / 98
39. செல்லமே செல்லம் என்றாயடி / 100
40. வலி / 103
41. பார்த்தீபனின் பன்னிருநாள் / 105
42. நல்லாட்சி / 106
43. வற்றாத காயங்கள் / 109
44. காலிமுகத்திடலும் முள்ளிவாய்காலும் / 112
45. தீயில் இறங்கிய சீதை / 114
46. கைம்பெண் / 116
47. பூரணமானவள் / 118
48. வேண்டுதல் / 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கு...

பொறுத்திரு
உன் காலம்
புலரும்வரை
மௌனித்திரு
ஒரு மேடை
கிடைக்கும்வரை

காத்திரு
காயங்கள்
ஆறும்வரை
தனித்திரு
துணிவு
பெறும்வரை

தள்ளியிரு
உறவுகள்
தேடும்வரை
எண்ணியிரு
நிலமை
மாறும்வரை

உண்மை பேசு
அச்சம்
விலகும்வரை
பயணம் தவிர்
பாதை
தெளிவாகும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் கூடாது
எதுவும் சாத்தியம்
ஆகும்வரை
குறிக்கோள் கொள்
இலக்கை
அடையும்வரை

அழுது தீர்
மனமது
கல்லாகும்வரை
தொழுகை செய்
உனக்கு
நம்பிக்கை உள்ளவரை

ஒதுங்கி நில்
சபை உனை
அழைக்கும்வரை
நல்லது கெட்டது
தேடிப் பழகு
அனுபவம் பெறும்வரை

உனை நீ நம்பு
உலகில்
வாழும் காலம்வரை
பிறகுபார்
நீ இருப்பாய்
உலகம் உள்ளவரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணயம்

எழில் கொண்ட
வாழ்வுதன்னை
எளிமையோடு
நகர்த்திவிடு!

நிகழ்கால
விதியை கண்மூடிக்
கடந்துவிடு!

பொருள் சேர்க்க ஓடும்
பொழுதைக்
குறைத்துவிடு!

அன்பு காட்டும்
மனிதம் கொண்டு
மருத்துவம் இன்றி
மகிழ்ந்துவிடு!

உண்ணப் பழமும்
குடிக்கக் கஞ்சியும்
இல்லாதவருக்கு
கொடுத்துவிடு!

வணங்கும் தெய்வம்
வாழ வைக்கும்
எனும் கூற்றைக்
குறைத்துவிடு!

ஆயுள்காலம்
அழகாய் மாற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்துளியிலும்
கவனம் எடு!

தேடும் உறவுகளோடு
அன்பைப் பகிர்ந்து
தொல்லையின்றி
வாழ்ந்துவிடு!

கடந்த காலக்
காதலை
கனவில் காண
முயற்சி எடு!

தூக்கத்தில் கூட
இளமைநாளின்
இன்பம் கண்டு
முழித்துவிடு!

எதை நோக்கி
ஓடுகிறோம்?
எனும் கேள்விக்கு
பதில் தேடிவிடு!

கிடைத்தால்
மண்ணில் நீ இன்னும்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
என நம்பிவிடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழலாம்... வா...

கூப்பிடும் தூரத்தில் மரணம்! - வா
வாழ்க்கையை கொண்டாடலாம்
கூப்பாடு போடுவதை நிறுத்தி
குழந்தைகளாகி மகிழாலாம்

பிடிவாதமும், தன்மான ரோசமும்
மண்ணில் வாழ வைக்குமா?
பிடிமானமற்ற வாழ்க்கைமுறை
பரம்பரைக்குச் சோறு போடுமா?

அடுத்தவன் குடியறுத்து அதை உன்
உலையில் போட்டு உண்டாலும்
படைத்தவன் பார்வையிலிருந்து
உன் பரம்பரை கூட தப்ப இயலாது

நகை, பணமென்றும் சேர்த்ததெல்லாம்
எங்கு கொண்டு சென்று சேர்ப்பாய்?
வகை வகையாய் வாங்கியதை இறுதியில்
உன் கூடவா எடுத்துப் போவாய் ?

பகையும், விரோதமும் அற்றதொரு
வாழ்க்கையை வாழலாம் வா!
குகையில் வாழும் ஓநாய்களாய் இன்றி
மண்ணில் மனிதர்களாய் வாழலாம் வா!

எளிமையோடு இணைந்து என்றும்
இளமையோடு இனித்து - அதோ அந்தக்
கிளிகள்போலே வானமளந்து இங்கே
ஒற்றுமையோடு வாழலாம் வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா! வாழலாம் வானையும் ஆளாலாம்
தோல்விகள் நேர்ந்தாலும்
வாதைகள் நெருங்கி வந்து தெருவில் - உனை
விட்டாலும் வா! வாழலாம்...

பிறர் வீடுமனை திருடாமல் - காணி
வளவு களவாடாமல் வாழலாம் வா!
வெள்ளைவேட்டி கட்டிக் கொள்ளை
அடிக்காமல் நன்றே வாழலாம் வா!

இறைவனவன் படைத்த பூமியில்
இடமா இல்லை தூங்கி முழிக்க
குறைகள் கூறித் திரியும் அவர்களை
விலத்தி நிறைவாய் வாழலாம் வா!

பத்துவிரல் போதுமடா உழைத்துண்டு
தன்மானத் திமிர் காட்டி வாழ
சொத்துண்டு சுகமுண்டு என்போர்
மத்தியில் மிடுக்கோடு வாழலாம் வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முண்டாசுக் கவிஞன்

தன் மூச்சு முட்ட
கவி சொல்லி வாழ்ந்தவன்
என் பிள்ளைக்கும்
தன்னை விட்டுச் சென்றவன்

காடு மேடெல்லாம்
நடந்து எழுதியவன்
வானளக்கும்
பட்சிகளின் நண்பனவன்

நாட்டு மக்களுக்கு
விடுதலை கேட்டவன்
வீட்டுப் பெண்களுக்கும்
அது வேண்டுமென்றவன்

வெள்ளையனுக்கு முன்
வேட்டி கட்டி நின்றவன்
விரல் நீட்டிச் சமத்துவப்
புரட்சியைப் படைத்தவன்

அக்கிரகாரத்தில் உதித்த
அக்கினிக் குஞ்சவன்
வந்தேறிகளை எதிர்த்து
அச்சமின்றி எச்சரித்தவன்

பிடி கொடுத்துப்
பிழைக்கத் தெரியாதவன்
அவன் தமிழ் குடித்து
வளர்ந்த எழுத்தாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனல் கக்கி எழுதும்
எழுத்தாணி அவன்
எவருக்கும் அடி
வணங்கி அடங்காதவன்

பழமையைக் கொழுத்தப்
பிறந்த தீ அவன்
புதுமை செய்யெனப்
பாடம் புகுத்தியவன்

யானை செய்த பாவம்
மரணத்துக்கு உதவியது
மரணம்செய்த மாபாவம்
கவிஞனைக் காவு கொண்டது

அவன் ஞானம் நிறைந்தவன்
அவன் நிலையானவன்
காலங்கள் கடந்த பிறகும்
கவிஞன் நிரந்தரமானவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தமில்லாது தூங்க வேண்டும்

நித்தம் மானிடம் சிறக்க வேண்டும்
குருதி தோயாத நிலம் வேண்டும்
புத்தியில் விரோதம் கழிதல் வேண்டும்
மனிதமாண்பு புகுத்தல் வேண்டும்
நித்திய அறமதை புரிதல் வேண்டும்
இறையாண்மை அறிதல் வேண்டும்

புத்த போதனை மதித்தல் வேண்டும்-அதை
புறம் தள்ளுவோர் மரித்தல் வேண்டும்
சத்திய வாக்கில் அரசியல் வேண்டும்
ஆளுமை ஆற்றல் அளவிடல் வேண்டும்
புத்தக அறிவுடமை இருத்தல் வேண்டும்
உயிரின அன்புடமை போற்றல் வேண்டும்

வித்தகப் படைவீரர் இங்கு வேண்டும்
சுதந்திரச் சரித்திரம் எழுதிட வேண்டும்
சித்தஞானம் மண்ணில் வேண்டும்
மழலைகள் மகிழ்வு பரவ வேண்டும்
தத்துவ மாண்பினை நிரப்ப வேண்டும்
பொதுவுடமை காத்தல் வேண்டும்

யுத்தம் இல்லாமல் இப்பூமி வேண்டும்
யுகம் நான்கும் செழிக்க வேண்டும்
சித்தமதில் நற்சிந்தனை வேண்டும்
ஜெகத்தில் நல்நெறி வேண்டும்
சுத்தமான காற்று வேண்டும்-இங்கு
சத்தமில்லாது தூங்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சிக் கொஞ்சி

உன் கண்களைப் பார்த்தபடி
நானும்
என் கண்களைப் பார்த்தபடி
நீயும்

ஆயுளின் கடைசித்துளி
வற்றும் வரை இடைவெளிக்கு
இடமளிக்காது
இப்படியே இருக்கலாம்

இடவலம் தெரியாத
குழந்தைகளாய்
தாறுமாறாய்
தடம்புரண்டு
அழுக்காகி
குளிக்கலாம்

அங்கிங்கு ஓடி
கால் கை தேய விழுந்து
உனக்கு நானும்
எனக்கு நீயும் மாறிமாறி காயத்தை
ஊதி ஊதி ஆற்றலாம்

என் உப்பில்லாத
சமையலை
நீ சுவைக்க
உன் இனிப்பில்லாத
தேனீரை நான் பருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரின் சமையலும்
சுவையானதென்று
பொய்யோடு
பாராட்டிக் கொள்வோம்

பாதிவழிவரை
பயந்து வரும்
ஒருதலைக் காதலனாய்
நான் உன் பின்
நடந்துவர
சட்டெனத் திரும்பி
நீ என் முடிகளைக்
கலைத்துவிட்டு
புருவத்தில் முத்தமிட

உன் தெருவில் நீ நிற்க
கடைக்கண் பார்வை
நான் பார்க்க

கோயில் தெருவில்
நான் நிற்க
தெய்வீகப் பார்வை நீ பார்க்க
பார்வைகள் பறவைகளாகி
காதல் பந்தலில்
கூடுகட்டி குடி புக

என் வெப்பத்தை போர்த்தபடி
நீயும்
உன் வெப்பத்தை
உடுத்தியபடி நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயகாதல்!

மறுபடியும் நாம் ஒருவருக்கொருவர்
சந்திக்கும்
சந்தர்ப்பம் கிடைத்தால்

வாய்க்குள்
ஒரு
புன்னகை!
மெல்லிய
உரசல்!
சாயங்காலக்
கடற்கரை!

சுடச்சுட
சுண்டல்!
தொலைதூர
நடை!
இடைவிடாத
உரையாடல்!

மணிக்கூடு
பாராத பொழுதுகள்!
சாலையோர
தள்ளுவண்டிச்
சாப்பாடு!

நிறுத்துங்கண்ணா
என சொல்லும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்சக்கரவண்டிப்
பயணம்!

மனனம் செய்த
ஹைக்கூ!
ஒரு நிழலின்கீழ்
தோல்சாய ஒரு நொடி!

ஒரே நேர்கோட்டில்
நிகழும் சிந்தனை!

சேருவோமா?
மாட்டோமா?
என்ற எண்ணம் கடந்த
வண்ணக் கற்பனை!

உனக்கு முன் நான்...
இல்லை ! நானெ
முரண்பட்ட இறப்புவாதம்!

காலம் கடந்து
தொலைதூரம் தொலைந்த பிறகும்
உனைக் கண்ட நொடியில்
உணர்கிறேன் தூக்கில் இடப்படாத
அந்தத் தூயகாதலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லாங்குழல் பூப் பூத்தது!

என் வாசல்வரை வந்து
சுவாசத்தில் நிரம்பி!
உயிரின் மையப்
பகுதியில் இருந்து
ஊஞ்சல் ஆடி!

காலமழையில்
என்றும் கரைந்திடாது
எனக்குள்
ஆளவேரூன்றிய காதல்ச் செடியே!

இக்காலம் கடந்து
எக்காலமும்
கரம் கோர்த்து
என் உயிர்மேட்டில்
வந்தமர்ந்தவளே!

நீ காதல்
சொன்ன
தருணத்தில்
என் பிரபஞ்சம்
விண்மீன்களால்
ஒளிர்ந்தது!

நீ காதலால்
பார்த்த கணத்தில்
என் புல்லாங்குழல்
பூப் பூத்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ காதலோடு
சிரித்த அந்த
நொடியில்
என் கல்லீரல்
கரைந்தது!

ஒவ்வொரு வினாடித்துளிகளிலும்
உன் சிநேகிதத்துவம்
சுருங்கிச் சுருங்கி
சில்லென்று ஒரு
காதல் கிரகமாய்
தோன்றியது!

வற்றிப்போன தெருவெள்ளமாய்க்
கிடந்த என்
மார்புக்கூடம்
மகிழ்ச்சி வெள்ளத்தில்
ததும்புகிறது!

பொற்காலத்தின்
பள்ளத்தாக்கில்
நிரம்பிப்
போயிருக்கிறது
தற்போதைய
என் அன்றாடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருப்புக் கோரிக்கை...

காமம் இல்லாத
ஒரு காதல்
செய்வோமா?

உடலுக்கும்
உடலுக்கும்
இடைவெளி வைத்து
ஒரு ஊடல் கொள்வோமா?

தனிமை என்றொரு
கிராமம் அமைத்து
அங்கே தன்னந்தனியே
உலாவித் திரிவோமா?

ஓர் அறை வீட்டில்
இருவரும் வாழ்ந்து
ஒரு காவியமாவோமா?

ஒரு தட்டில்
உண்டு
ஒரு குவளையில்
அருந்தி
பொழுதைக்
கழிப்போமா?

ஒரு கட்டில்
ஒரு போர்வை
ஒரு தலையணை
உறங்கிப் பார்ப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வெய்யிலானாலும்
கொட்டும்
மழையானாலும்
ஒரு குடையின் கீழ்
நடப்போமா?

அந்திவெளிச்சம்
இளையராஜா இசை
கடற்கரையின் ஈரம்
அலையின் இரைச்சல்
இவைகளோடு
நட்பால் இணைவோமா?

தள்ளிப் போகமல்
தடயங்களை
வைத்துவிட்டு
உள்ளுணர்வோடு
உருகிப் போவோமா ?

இலை குழையை
ஆடையாக்கி
கற்குகை வாழ்க்கை
வாழ்ந்து பார்ப்போமா?

கணவன் மனைவி
ஆனபோதும் நாம் புதுசாய்
அறிமுகமானவராய்
எண்ணி ஒரு பயணம்
மேற்கொள்வோமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் காதல் இப்படித்தான்

எது எப்படியோ
என் காதல் இப்படித்தான்
யார் எதை வேண்டுமானாலும்
சொல்லட்டும்
எனக்கு இப்படித்தான்
காதலிக்கத் தெரியும்

உன் வீட்டு முன்
உன் கல்லூரி முன்
நீ போகும் கோவில் முன்
நீ தினம் போய்வரும்
தெருக்களில் நான்
எப்பொழுதும் நிற்பேன்
கூடாது என்று யார்
சொன்னாலும்
சத்தம் போடுவேன்

எனக்குப் பறவாயில்லை
எவர் பார்த்தாலும்!
என் தேவை எதுவோ
அது நோக்கி மட்டும்
என் போராட்டமிருக்கும்

உனக்காக !
உனக்காக மாத்திரம்
இந்தத் திமிர்
இந்த அடம்
இந்தப் பிடிவாதம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
பிடிமானத்துக்குள்
நான் பிடியாகும் வரை
யாருக்கும்
பிடி கொடுக்கமாட்டேன்

நீ எனை அடி
திட்டு, துரத்து
ஆனால்
விட்டுட்டுடோ அல்லது
விட்டுக் கொடுத்திட்டோ
போகமாட்டேன்

என் ஒட்டுமொத்த
சந்தோசத்தின்
உச்சம் நீ!

ஆகவே உன் விழிகள் ஓரம்
இழைந்து ஓடும்
வெளிச்த்தில் நான்
தினம் வாழ்ந்திட வேண்டும்

எது எப்படியோ
என் காதல் இப்படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழிக்காலம்

ஏ...கடலே
பொங்காதே
உன் எல்லை கடந்து
எமக்குத் தொல்லை தராதே

ஏ...கடலே
துள்ளி எழும்பி
ஊருக்குல் புகாதே
துயரத்தை விதைக்காதே

நீரின் நிலை மீறி
நிலத்தில் நீ
கால் வைக்காதே

இங்கு எல்லாம்
அவரவருக்கென்று
ஒதுக்கப்பட்ட
வாழ்வியலின்
வழி செல்பவர்கள்.

அதுபோல் உனக்கென
ஒதுக்கப்பட்டிருக்கும்
தோட்டக்காடு
வனப்பகுதிகள்
அங்கு உன் கோபம் தனி!

மழையென
விழுந்து
தெருவோர
வாழ்வாதாரத்தை
வீணடிப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோடு கலந்து
புயலாகி
அள்ளிச் செல்வதையும்
நாம் ஒருபோதும்
அனுமதிக்க மாட்டோம்

எங்களின்
வாழ்க்கைக் குளத்தில்
தண்ணீரைக்
காட்டிலும்
கண்ணீர்தான்
நிரம்பியிருக்கிறது.

தப்புத்தான்
நீ தவண்டுபோகும்
பாதையில்
குப்பைகளைக் குவித்தது

நீ தேம்பி
நிற்க வேண்டிய ஏரியில்
கட்டிடங்களை
எழுப்பியது
தப்புத்தான்!

நவீன அறிவியலின்
நங்கூரத்தில்
குத்துப்பட்டுக் கிடக்கிறது
இந்தப் பாழாய்ப் போன இந்த பூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரேபியா பாலைவனமும்
ஆபிரிக்கா வறண்ட வளமும்
உன் வருகைக்காய்
ஆண்டுக்கணக்கில்
காத்துக் கொண்டிருக்கின்றது

கருணை காட்டு!
மேகங்களுக்கு
அங்கு பொழிய
கட்டளையிடு!

ஏ...இடி மின்னலே!
குழந்தைகளின்
மகிழ்ச்சியை உடைத்து
முகத்தில் அச்சம்
பரப்பாதே

ஓடிவிளையாடும்
பருவத்தில் அவர்களின்
பாதைகளைத் திருடாதே

பூகோள வாசலில்
அதிகார வர்க்கத்தின்
நாற்காலிகளை
விட்டு வைத்து
விலத்திப் போகும் நீ

ஏழை எளியோரின்
புன்னகையை
புடுங்கிப் போவது பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனே! ஓ மனிதனே!
பழைய தமிழனின்
பழக்கத்தை
புறக்கணிக்காது
இயற்கையைத் தொழு
ஆதரித்து வணங்கு
உன் உயிர் காக்கத் துணி!

சூரியனுக்கு
சூனியம் வைக்காதே!

ஏணைய கோள்களுக்கு
ஏவுகணை அனுப்பாதே!
இல்லற சுவாசப்பையில்
நுண்ணிய பொடியை
செலுத்தாதே!

செயற்கை
மழை!
செயற்கை
மேகம்!
பூமியின் சுவாசத்துக்கு
ஆரோக்கியமில்லை!

மண்டலங்களின்
சுற்றுச்சூழலில்
நோய் தொற்றாதிருந்தால்
அண்டத்தின்
இதயம் நீண்டு இயங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாளம்பாய் ! [என் தாய் பிறந்த குறிச்சி]

சாளம்பாய்!
சோலைகள் உறங்கும் பாய்
எங்களை அந்த இயற்கை
தன்னகத்தே வைத்திருந்த தாய்...

பயிர் விளைச்சலுக்காய்
பராபரன் படைத்த நிலம்
அந்தப் பலாலிக் கடலோரம்
பசுமையோடு துலங்குமிடம்

பட்சிகளுக்கு உணவகம்
பட்டாம்பூச்சிகளுக்குத் தேனகம்
பாம்புகளுக்குப் பதுங்குமிடம்
அத்திசை எங்கும் பரவசம்

நீர் இறைச்சலின் இரைச்சலும்
அதில் கோவணக் குளியலும்
ஈரக்காற்றின் உரசாலும் - அங்கு
இதயம் நிரம்பிய காதலும்...

திசையெங்கும் தோட்டங்கள்
மண்வெட்டி போட்ட பாதையில்
அங்கிங்கு பிசகாமல் தண்ணி
பாத்தியைப் பதம்பாக்கும்

பச்சை இலைக்குள் சிகப்புத்
தக்காளி கொத்தாய் தொங்கும்
நாவல் கத்தரிக்காய் நாணத்தோடு
நிலம் பார்த்து தொங்கியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரத் தோட்டத்திற்குள்
அணில்களின் அணிவகுப்பும்
கிளிகளின் கிழுகிழுப்பும்
ஆகா கண்களுக்குள் தித்திக்கும்

வடலிப் புதர்குள்ளே - மெல்ல
பதுங்கும் முயல்பிள்ளை-பொழுது
இருட்டிப் போக ஆடுமாட்டோடு
போகும் ஆச்சி சின்னப்பிள்ளை

என்னத்தை விதைச்சாலும்
வரவேற்று மகிழும் மண்ணடா
விஷத்தைப் போட்டாலும்
அமிர்தம் தான் விளையுமடா

வாய்க்குள் சிரிக்கும் குமரிகளும்
வம்புக்கு இழுக்கும் இளசுகளும்
அதிகம் தான் அங்கே- அந்த
இயற்கையோடு வாழ்ந்தவர் எங்கே?

சாதி சச்சரவு ஏதும் இல்லை
சமய வேற்றுமை அங்கில்லை
சமமான சரித்திரத்தின் எல்லை
இன்று அங்கே நாதி இல்லை

தோட்டம் பார்த்துக் கொண்டே
தோல்வியற்று வாழ்ந்த பூமியடா
அந்த மண்ணில் விளைஞ்சதெல்லாம்
இன்று எங்கள் உடலில் இரத்தமடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே தமிழே

ஒரு நாள்! ஒரு நாள்!
என் நிலைமை மாறும்
மறுநாள் மறுநாள்
பரணி எனைப் பாடும்

திருநாள் திருநாள்
வளமாய் வந்து சேரும்
வரும்நாள் வரும்நாள்
மகிழ்ச்சியில் ஆடும்

அத்திசை இத்திசை-எத்
திசையும் எம் கொடியேறும்
ஐம்பெரும் காப்பியமும்
இவ்வகிலத்தை ஆளும்

இருகை இருகை
வான் நோக்கி உயரும்
இறக்கை இறக்கை
எனக்கும் முளைக்கும்

பெருமை பெருமை
எனை வந்து கூடும்
அட எதிலும் என்
உரிமை நிறைவேறும்

அருமை அருமை என
கண்டங்கள் போற்றும்
கண்டங்கள் யாவும்
எனைக் கண்டு வியக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கும் பாருக்கும்
தாய் நானென அறிவாய்
கல்லையும் பிடுங்கிப் பார்
அதன் வேரிலும் எனை அறிவாய்

நான்...நான்...என்பதை தீ
கொண்டு கலைத்து
நாம்... நாம்... என்று - திமிர்
கொண்டு தமிழை உயர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் திருமொழி

கோடி கோடி ஆண்டுகள்
வேரோடிய என் மொழி-இனி
தேடி எங்கு போகினும்
கைக்கு எட்டாத பண்மொழி

வள்ளுவன் வான் அளந்து
வாழ்த்தி வளர்த்த திருமொழி
வள்ளிக்குறத்தி மணவாளனின்
மனம் கவர்ந்த குருமொழி

சோழ பாண்டியர் கொடியில்
பட்டொளி வீசிய வீரமொழி
சூழப் பகைவன் வருகின்
சங்காரம் நடத்தும் புலிமொழி

ஔவை மூதாட்டி அறநெறி
போதித்த இறைமொழி
ஔடதம் கண்டறிந்து அகிலம்
காக்கும் மருத்துவமொழி

ஐந்து சமுத்திர ஆழத்தில்
புதைந்திருக்கும் புகழ்மொழி
இந்த அகில நிலப்பரப்பில்
பரந்து வாழும் உயிர்மொழி

குமரிக் கண்டத்தின் மடியில்
கண்ணுறங்கும் ஆதிமொழி-அவள்
குமரியாய் விளங்குவதால்
மண்ணில் இன்னும் கன்னிமொழி

கீழடியில் இருந்து இன்னும்
ஏற்றம் காட்டும் தனிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழாதடி பராசக்தி இது
பாவேந்தர்களின் இசைமொழி

வேலடி, சிலம்படி வாள்வீச்சு
வீரர்களின் போர்மொழி
வில்லடி வித்தையை, விழியில்
வைத்திருக்கும் கலைமொழி

மானமா மதுரையிலே சங்கம்
வளர்த்த சரித்திரமொழி
ஊனமா உண்டாகும் ? இது
நக்கீரனின் தூயமொழி

நாநிலம் கட்டிக் காத்து
செழிப்புற ஆண்ட எழில்மொழி
சாகாவரம் பெற்றுவந்த
மேதகுவின் மேன்மைமொழி

சிறப்பொலி எழுத்தில் ஏந்தி
தரணியில் நிலைத்த மொழி
மறத்தமிழர் துடிப்பினிலே
வாழ்வாகும் செம்மொழி

திருவாசகமும், திருப்புகழும்
தித்திக்க அருளிய கனிமொழி
திருத் தேவாரங்கள் தனிலே
திகழ்கின்ற தெய்வீக மொழி

சொல்லடி சிவசக்தி - என்
மொழிபோல் உண்டோ ஒரு மொழி?
இல்லையடி ! இல்லை...என்
தாய்மொழிதான் உயர்மொழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

கோபம் மறந்து
கட்டித்தழுவு
குற்றம் மறந்து
குழந்தையாகு

உனக்குள்ளும்
கருணை உண்டு
தேடிப்பார்-நீயும்
கடவுளும் ஒன்று

மன்னிப்பெனும்
அருளை வழங்கு
மனதில் இருக்கும்
இருளை அகற்று

சுற்றங்கள் தேடி
உலகெங்கும் போ
முற்றத்தை மிதித்து
உறவுகளை மதி

நேற்று நடந்ததை
எண்ணி வெறுக்காதே
இன்றும் நடக்கலாம்
தள்ளிப் போகாதே

நாளை எதுவும்
நடக்கும் காத்திரு
கடவுள் உன்முன்
தோன்றலாம் விழித்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் தந்தையும்
உன் இரு கண்கள்
பிறப்பும் இறப்பும்
இறைவனின் கையில்

அடிக்கு மேல்
அடி விழலாம்
பொறுத்துப் போ-சீறி
எழுவது சிறப்போ?

சினத்தை அடக்கி
சிரிப்பைக் காட்டு
நற்குணம் காட்டி
உனை உயர்த்து

பிறரைக் கடிந்து
வசைபாடி-ஆறாம்
அறிவை இழக்காதே
அன்பே சிவம் மறக்காதே

வலி தரும் சொல்லை
அறவே மறப்போம்
ஆறுதல் கூறும்
ஆற்றலைப் பெறுவோம்

துரோகம் என்றொரு
துயரம் துறப்போம்
ஒற்றுமை என்றொரு
உலகம் அமைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகியல்

ததும்பும் அவள் வதன அழகில்
சரணடையும் இளமை முற்றும் - புதரில்
ஒதுங்கும் முயல்கள் போலே
இருக்கும் அவள் மார்பின் தோற்றம்
பதுங்கிய புலியின் பார்வை போல
விரிந்திருக்கும் விழிகள் இரண்டும்
செதுக்கிய சிலைக்கு உயிர் வந்ததுபோல்
அவள் உடல் அமைப்புத் தோன்றும்

ஆதிகால ஆடைபாதி நாகரிகம் மீதி
இரண்டும் கலந்து நடையிட்டு அவள்
வீதிக்கு வந்தால் வாலிபர்கள் காலி; மனதைச்
சாய்க்கும் மந்திர தந்திரமவள்
சாதிக்கத் துடிக்கும் சந்ததியைச் சிரித்து
மயக்கும் காமனின் மகள்; மோக
வேதியல் கலந்த பெண்; அவள் உடல்
சாம வேதத்தின் மெய்ப்பொருள்

பரம்பொருள் படைத்த பதுமையின்
சுரங்கம் அவள் அந்தரங்க அரங்கம்
வரம்வாங்கித் திழைத்து வந்திங்கு
தினம் ஆடத்துடிக்கும் அவள் மடிமன்றம்
கரம் குவிக்கும் கடவுளும் கசிந்துருகுவான்
கன்னிகையின் நிழலோரம் நின்றால்
நரம்புகள் சுரங்கள் மீட்டும் மங்கையை
எண்ணிக் கவிதை எழுதி நின்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசைபாட இணங்காது மனசு அவள்
வானதேவதைகளின் இளைய வாரிசு
அசைவத்தில் கலந்து வந்த நகைத்திரளோ
ஆசைக்கு அவள்தான் தாய்க்குலமோ; இல்லறத்
திசைகாட்டும் பேரின்ப ஆடவளோ
அவள் வயதுக்கு வந்த மிகையோ
மீசைக்குத் தேவையான அனைத்தையும்
தன்னகத்தே கொண்ட பேரண்டமோ ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள் காதல் அசதியில் உறங்குகிறாள்

பனித் தூரலின்
இரவில்
மெழுகுதிரியின்
ஒளியில்
சில்லென்ற
வார்த்தைகள் பேசி
எனை மெய்மறக்கச்
செய்பவள் அவள்

மெழுகுதிரியின்
ஒளியோடு
சில்மிசம் கொள்கிறது
காற்று

குளிரில் விறைக்கிறது
வினாடிகள்
கையில் இருந்தும்
கடிகாரம் விரைகிறது

இந்த எம் முற்றத்தில்
அச்சமில்லாத
ஒரு ஆறுதல்
உன்னருகில் உணர்கிறேன்
என்றாள்.

என்னடி இது?
நரையிலும் ஒரு நானம்
மூலிகை சமைக்கும்
உன் மூச்சில்
காதல் வெப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன், பேத்திகள்
எனும் பேறுகள்
அடைந்த பிறகும்
அன்றைய ஆனந்தம்

இன்னும் கசிகிறதோ?
என்றேன் செல்லச் சிணுங்கலோடு

உண்மைதானுங்கோ
கடந்த பாதைகளும்
அதன்மீது கண்ட
காயங்களும்
இந்த முதுமையில்
எண்ணுகையில்
இனிக்கிறது என்றாள்
மெல்லிய புன்னகையோடு

அவள் தன் ஒற்றை விரல் நீட்டி
நிலவைக் காட்டியபடி
என் கரத்துக்குள் தன்னை
அடக்கியவள்தான்
அப்படியே அடங்கிவிட்டாள்!

காதலித்த அசதியாக்கும்
ஓய்வெடுகிறாள்...போல
சரிதான்! முடிவிலும் அவளின்
காதல்தான் வெற்றி பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கும் அவனுக்கும் இடையில்

அவளுக்கு
உலாவுவதற்கும்
குலாவுவதற்கும்
நேரம் இல்லையாம்!

எதையெதையோ
சொல்லி மறுத்தவள்
இறுதியில்

நேரம் தேதி குறித்து
அவனது புலனத்துக்கு
அனுப்புகிறாள்

இன்று !
இந்த இடத்தில்
இத்தனை மணிக்கு
வருவாயா?

அவன்
பதில் ம்...
எனப் பறந்தது

அதுவொரு உணவகம்!
வந்தாள்
உண்டு, குடித்தாள்
எழுந்து இதழோடு
மெல்லியதாய் ஒரு இச்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்:
இவ்வளவு தானா? என்றான்

அவள்:
வேறென்ன? என்றாள்

சற்று இருந்து

பேசலாமே?
என்றான் அவன்

நேரம் இல்லை
எனச் சொல்லி
கெஞ்சலுடன்
விடைபெற்றாள் அவள்

பாவம் அவன்
தனித்திருந்தபடி
தன்னிடம் கேள்வி
கேட்டான்

இது இந்த அவசர கால
பூமியின் தவறா?
அல்லது
காதல் ஒரு
பொருற் பிழையா?
கடல் அலைக் காதல்
காலாவதியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதா?

இதில் என் பிழை
எனப்படுவது யாது?

செய்த இம்சை
பண்ணிய சில்மிஷம்
புலம்பியவை யாவையும்
பொறுமை இழக்காது கேட்டவன்

அனைத்தையும்
விரும்பி
நடந்தவனாச்சே
இதில் நான் அவளுக்குக்
கசந்து போக
காரணிதான் என்ன?

கனவுகள் கலைத்தேனா?
அழகில் குற்றம்
சொன்னேனா?
சுதந்திரம் பறித்தேனா?
சந்தேகச் சண்டை
பிடித்தேனா?

அவள் எனைச்
சலித்துப் போக
என் பிழைதான் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகொரு நாள்
அவன் புலனத்திற்கு
அவள்

இன்று !
இந்த இடத்தில்
இத்தனை மணிக்கு
வருவாயா?

அவன்: ம்...

வந்தாள்...
ஒருத்தன் கூடவே வந்தான்
அறிமுகப் படுத்தினாள்
இவர் என் பெஸ்ரி (besti)

பெஸ்ரி...?

எப்பவும் என் கூடவே
இருப்பான்

அப்போதுதான்
அவன் தான் விட்ட பிழை
யாதெனப் புரிந்தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து போகலாம்

எங்கேனும்
ஒரு சந்தர்ப்பத்தில்
நான் உனைச்
சந்தித்தால்

அக்கணம் தொட்டு
என் இரவுகள்
ரணமாகும்
விழிகள் தூக்கத்தைத்
தொலைக்கும்

பழகிய பாதைகளில்
மறுபடியும்
பயணிக்கத் தோன்றும்

மின்னஞ்சல்
பெட்டியில்
உன்னஞ்சல்களை
தேடத் தோன்றும்

கைபேசியில் - உன்
குறுஞ்செய்திகளை
ஏன் அழித்தேனென
எண்ணத்தோன்றும்

எழுதி எழுதிச்
சிரித்த நொடிகள்
தேம்பித் தேம்பி அழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கொடுத்து - நான்
சேகரித்த சின்னச்
சின்ன ஆறுதல்கள்
தலை தூக்கும்

கனவுத் தபால்காரன்
உன் முகவரி தேடுவான்

எமது காதலை கௌரவித்த
சாலையோர மலர்கள்
உனைச் சந்திக்க விரும்பும்

நான் எழுதி
நீ படித்து முடிக்காத
கவிதைகள் தற்கொலைக்கு
தயாராகலாம் அல்லது
உனை வந்துசேர
அடம்பிடிக்கலாம்

ஆகவே கடந்த
காலக் காதலை
காயப்படுத்தும்
ஒரு சந்திப்பை
தயவுசெய்து
ஏற்படுத்தாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டென்று காதலாகு

கனவுக்குள்
தொலைந்து போகாதே
வெண்மேகக்
கூட்ட்டாமாய் மிதக்காதே

காற்றோடு
உரசாதே
பசியோடு உலாவாதே

தாகத்தோடு
நடக்காதே
கண்ணாடியை
தினம் தரிசிக்காதே

கவிதை எழுத
முயற்சிக்காதே
கனவில் அவளைக்
கண்டேன் என்று
நண்பனுக்குப்
பொய் சொல்லாதே

அவள் வரும்
தெருவில் தினம்
காத்திருக்காதே
உன் பேரன்புக்குரியவள்
என்று பெருமை பேசாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கணக்காய்
மறைந்திருந்து
அவளை இரசிக்காதே

முலைக்காத மீசையை வாரிவிடாதே
பத்துப் பைசா கூட
சட்டைப்பையில்
வைத்திருக்காதே

முற்றத்து மலர்களை
அவளோடு ஒப்பிடாதே
கருணை !பெருக்கெடுக்கும்
கண்டு கொள்ளாதே
தனிமையோடு
தோழான்மை கொள்ளாதே

குழந்தைகளை கண்டால்
செல்லம் கொஞ்சத் தோன்றும்
பண்ணாதே!
கூட்டத்திலும்
தனியொருவனாய் காட்டாதே

புதுசாய் பிறந்தேன்
என்று புலம்பாதே
யாரடா இவளென்று
வியக்காதே

அதோ வருகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று
அவள்முன் உதயமாகு
போ... !
அங்கிங்கு திரும்பாதே
பார்வையை கீழை
விடாதே

நிமிர்...!
விழியும் விழியும்
பேச அனுமதிக்காதே
அடம் பிடிக்கும்
ஆனாலும்
இடமழிக்காதே

அவள் இமைகள்
மூடித் திறக்கும் நொடியில்
சட்டென்று
சொல்லிவிடு
நான் உனைக்
காதலிக்கிறேன் என்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணிவேர்!

வடக்கும் கிழக்கும்
திசைகள் இல்லை
வடகிழக்கு எங்கள்
வாழ்வியல்

கடந்தகால அரசியல்
காயங்களுக்கு
இங்கு மருத்துவம் கிடையாது

வெட்டும் குத்தும்
இனிமேல் வேண்டாம்
மீதமிருக்கும் தலைமுறையேனும்
சொந்த நிலத்தில்
வாழ்ந்து சாகட்டும்

வடக்கும் கிழக்கும்
திசைகள் இல்லை
வடகிழக்கு எங்கள்
வாழ்வியல்

கண்ணீர்க் காலத்தின்
ஆளத்தில்
திக்குமுக்காடியதை
இரத்த சரித்திரத்தில்
சறுக்கி விழுந்ததை

வரும் எதிர்காலத்தின்
பாதையிலும்
பழக்கிவிடுவது
பட்ட காயத்தின் மீது
ஆணி இறக்குவது போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தைந்து ஆண்டுகள்
மூண்டுகிடந்த தீயில்
கருகித் தீர்ந்தது போதும்

துரோகத்தால்தான் நாம்
வீழ்த்தப்பட்டோம்
இனியேனும்
விவேகத்தால் வென்று
கொண்டாடலாம்

ஆண்டு செழித்தவர்களின்
ஆணிவேர்
புதைந்து கிடக்கிறது
ஒருநாள் முகவரி புலப்படும்

மதம் பிடித்த
மனிதயானைகள் மத்தியில்
இனம் பிரித்த
வெறிநாய்கள் மத்தியில்

இருட்டைக் கிழித்து
வெளிச்சத்தில்
உற்சவம் நடத்துவோம்
கல்வி ஈந்து ஒரு
அறிவியல் உலகு
நெய்வோம்!

வடக்கும் கிழக்கும்
திசைகள் இல்லை
வடகிழக்கு எங்கள்
வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கென்ன?

ஊர் உனை என்ன
சொன்னால் உனக்கென்ன?
உனை நீ அறிந்தால்
பிறகென்ன ?

கேள்வி கேட்டால் பதில்
சொல்லத் தயக்கமென்ன ?
உண்மை உள்ள இடத்தில்
மயக்கமென்ன ?

பொய்யில்லை என்ற
பிறகு அச்சமென்ன?
போதுமான பாதையுண்டு
முன்னேறத் தடையென்ன?

நா எனும் பாம்புக்கு
நடுங்கி நீ போவதென்ன ?
பொறாமை போட்டியென்று
வெறுப்பதால் கண்டதென்ன?

தேவைக்காய் தேடிப்பழகும்
சொந்தமென்ன?
தீ சுட்ட பிறகு
உணர்ந்து பலனென்ன?

ஓடியோடி உழைத்து
நீ கண்டதென்ன?
செலவு செய்ய மிச்சமில்லை
ஆனாலும் வாழ்வதென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிச்சுற்றிக் கும்பிட்டும்
கிடைத்ததென்ன?
பொங்கலும், சுண்டலும்தானே
வேறென்ன?

நாட்டுக்கும் வீட்டுக்கும்
நீ செய்யும் குற்றமென்ன?
ஆராய்ந்து சரிசெய்தால்
வேறு குறையென்ன?

உனை நீ நம்பு - பிறகு
அவனென்ன இவனென்ன?
யாரும் உத்தமரில்லை - பின்
மரியாதை நிமித்தம் என்ன?

மக்களுக்கு நன்மையில்லை
இங்கு நீதிநியாயம் என்ன?
பிள்ளைகளே பெற்றவரை
தள்ளிவைப்பதென்ன?

நாளை உனக்கும் எனக்கும்
மண்ணில் மதிப்பென்ன ?
தீ தின்னும் உடம்பிற்கு
விளம்பரம் தேவையா என்ன?

கடவுள் கட்டளை இட்ட
பிறகு கெஞ்சி என்ன?
நீ செத்த பிறகு மண்ணில்
உன் மிச்சமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த கங்கையில் இந்தப் பாவம் தொலைப்பீர்

தாய்நாட்டைவிட்டு வந்தோம்
தரணியிலே ஏதிலியானோம்
தரமான தனித்துவத்தை
தலை குனிய வைத்தோம்

இனமானம் இழந்து நின்று
இரத்தத்தில் குளித்தெழுந்து
இதிகாசம் கிழித்தெறிந்து
ஈனப் பிறவிகளானோம்

அறம் காத்து நின்றவரின்
திறமழியத் துணைபோனோம்
வசந்தம் வந்து சேருமென்று
எண்ணியவரை அழவைத்தோம்

பெண்டில், சகோதரி என்று
பெத்தெடுத்த பெண்ணையும்
கண்டவன் வந்து கைவைக்க
கைகட்டி தலை குனிந்தோம்

கன்னத்தில் கண்ணீரின்
கோடுகள் காயாது போக
எண்ணத்தில் விழுந்த வடு
மருத்துவமின்றி மீறிச் சாக

நாட்டோடு, மானத்தை விற்று
உன் பசி போக்க முடியாது
தமிழா நீ செய்த பாவத்திற்கு
சிலுவை கூட மன்னிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையின் ஆளுமை கண்டு
பாரே வியந்தது அறிவாய்
எதிர்காலத் தலைமுறைக்காய்
களம் புகுந்தோரை மறந்தாய்

எந்தையும் தாயும் உலாவிய
நிலமதில் எவனெவனோ
குடிகட்டி நலம் காண - நீ
துணைநின்று பணிந்தாய்

குலமது ஊனத்தைச் சுமக்க
வெளிநாட்டான் கொடிநாட்ட
உன் நிலத்தில் நீ அகதியாகி
அவன் முன் முதுகு குனிந்தாய்

மொழி! தரமில்லையென்று
மேடைபோட்டு முழங்குகிறான்
நீயும் உடன்பட்டு உன் தாயின்
முலைப்பால் விஷமென்கிறாய்

எங்கள் வரலாறுகள் யாவும்
வாங்கியதென்றான்
சரிதான் மாற்றுங்கள் என்று
எழுதுகோல் எடுத்து நீட்டுகிறாய்

முன்னோர்களின் வழியை
பழித்து வாங்கும் இந்த பாவத்தை
எந்த கங்கையில் தொலைப்பாய்?
தமிழினமே ஓ... தமிழினமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் பிறக்கட்டும்

கண்ணுக்குள் கண்ணீர் வற்றட்டும்
புன்னகை உதட்டில் பூக்கட்டும்
எண்ணிய வளங்கள் செழிக்கட்டும்
ஏற்றம் வாழ்வில் நிறையட்டும்
வெண்நிறக் கொடி இங்கு பறக்கட்டும்
வேண்டிய வரம் அமையட்டும்
புண்ணிய பூமியில் பழமைகள்
அழிந்து புதியன தழைக்கட்டும்

நிலவைச் சலவை செய்து வா...வா
மழைக்கு மரியாதை செய்து வா
உலாவும் மானிடமே உணர்வில்
உண்மைகள் ஊன்றி வா...வா
உலகினைச் செழிப்புடன் ஏந்தி வா
சமஉரிமை கொண்டு வா...
வா பல பொய்களின் ஆட்சியழித்து
புதிதொரு ஆட்சியுடன் வா...வா

சதிகாரப் பாவிகளின் உயிர்போய்
சரியான சந்ததி உருவாகட்டும்
சுதிசேர்ந்ததொரு பாடல் போல்
சுதந்திரமாய் புதுமைகள் வரட்டும்
வதிவிட நாடே வளமென்று - நாமும்
பதிவுகள் செய்வதைத் தவிர்ப்போம்
புதிதொரு நாடங்கு புலருமானால்
புதியதை அங்கு பிரசவிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிவானம்

வானம்!
தன் தேகம் எங்கும்
கரும் சாம்பலை
அப்பிக் கொள்ள
பனிமழை பொழியும்
நகரம்
வெண்நிறக் காடாய் மாறும்.

மரம் !
தன்னைக் கழுவும்
பச்சைஆடை
அவிழ்த்துப்
பழுப்புஆடை
அணிந்து
இலைகள் விழும்!
கிளைகள் அழும்!
மண்ணில் சருகாகி
தன் தாயின் அடியில்
உரமாகும்!

காற்று வேகமாய் வீச
மரம் திறந்தமேனியோடு
போராடும்!
மரத்தின் தத்துப் பிள்ளைகளான
பறவைகள் மாத்திரம்
அப்பப்போ தங்கி
ஆறுதல் சொல்லிப் பறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன்! மரத்தின்
நிழல் தேடாத
காலம் இந்தப் பனிக்காலம்
மனிதன்
சுயநலவாதி என்பது
மரத்துக்கும் தெரியும்

பனிப்பூக்களின்
கனத்தை
ஏந்தியபடி கிளைகள்
அந்தரத்தில் ஆடும்

கருமேகத்தைக்
கிழித்து வரும்
அந்த மெல்லிய
வெப்பக் கீற்று
பனிப்பூக்களோடு
உரசும் வேளையில்
சொட்டுச் சொட்டாய்
உருகி ஒழுகும்
அந்தச் சுக
இடைவெளியில்
கிளைகள் சிலிர்த்து
பிறகு துளிர்க்கும்

மேகத்துக்குள்
புதைந்து கிடக்கும்
வெண்துகள்
கீழறங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பிரான் பிறப்பினை அறிவித்து

கோலகாலத்தை
வெளிச்சம் போட்டுக்
காட்டும்

ஒவ்வொரு ஆண்டும்
ஆண்டவன் பிறக்கிறான் - ஆனால் மனிதன் மாத்திரம்
ஒவ்வொரு ஆண்டும் விஞ்ஞான மோகத்துக்குள்
தொலைகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரே எங்கிருக்கிறாய்...?

எனை
எவளோ ஒருத்தி
நேசிக்கிறாள்
ஆனால்
அவள் எங்கிருந்து
சுவாசிக்கிறாள்
அவளோ? இவளோ?
என யோசிக்கிறேன்
எவளாய்
இருப்பாளென
விழியால்
விசாரிக்கிறேன்

ஏங்கி ஏங்கித்
தூங்குகிறேன்
அவளுக்காக
உயிரை மண்ணில்
தாங்குகிறேன்

நிலவிலோ
மலரிலோ
மங்கை இரதியவள்
மடியிலோ
பிறந்திருப்பாள்?

மானோ
மயிலோ
மரகதக்குயிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு சாயல்
கொண்டிருப்பாள்!

என் நெஞ்சத்து
மகராணி எவளென்று
தெரியவில்லை
அட...!
மஞ்சத்தில் கூட
பசுமையில்லை

ஆயிரம்கோடி
உலகில் பெண்களடி
அதிலே
என்னவள்
எனப்படுபவள்
எவளடி?

தாவணி போட்ட
தாமரை மகளைக்
காணத் தவமிருக்கிறேன்
யார் அவள் என்று
புலம்பி நானும்
புலவனாகிறேன்

போகவும் வரவும்
பாவையரைக்
காண்கிறேன்
எவள் சிரித்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாலும்
வெட்கம் கொண்டு
தள்ளி நிற்கிறேன்.

விண்மீன் விழியோ
கொடி இடையோ
கிளி கொண்ட மூக்கோ
கொவ்வை இதழோ
கவிசொல்லி நானும்
கற்பனையில் வாழ்கிறேன்

எனை
எவளோ ஒருத்தி
நேசிக்கிறாள்
ஆனால்
அவள் எங்கிருந்து
சுவாசிக்கிறாள்
அவளோ? இவளோ?
என யோசிக்கிறேன்
எவளாய்
இருப்பாளென
விழியால்
விசாரிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வின் தாகம்

தனிமையை அழைப்போமா
அழைத்துச் சில நொடிகள் இருப்போமா
இனிமையோடு சிலதைப் பகிர்வோமா
பகிர்ந்து அதைப் பருகுவோமா; உன்
கனியிதழ்களை மெல்லத் தடவி
கண்களை மூடித் திறப்போமா
பனித்துளியில் அங்கம் நீராடி
மூச்சின் தீயால் குளிர்காய்வோமா

செவிகள் இனிக்க உரையாடும் இரவில்
தென்றல் புக இடம் அழிப்போமா
கவிகள் எழுதத் தூண்டும் தருணம்
விழிகள் மூடாதிருக்கத் தவம் செய்வோமா
தவிக்கும் வேளை பிழைகள் வராது தடுக்க
நிலவின் ஒளி கொஞ்சம் பிடிப்போமா
புவி ஈர்ப்பின் மடியில் கிடந்து சிந்தும்
வேர்வைத்துளியால் நனைவோமா

அண்டம் தனிலே உயிர்த்ததெல்லாம்
இரவுபகல் அனுபவிக்கத் தானே
பண்டம் பெண்ணில் ஆயிரம் உண்டாம்
பாண்டவர் பூமியிலும் அது நிகழ்ந்தது தானே
உண்டு மகிழ்வதில் என்ன தப்பாம்; இருவர்
உள்ளமும் இங்ஙனம் ஒன்றென ஆனபின்னே
கண்டு உண்டு சுவைத்தவரெல்லாம்; காதல்
தவறென்றால் மண்ணில் உயிர்த்திருப்பாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவங்கள் தாண்டி ஓடிய பின்னும்
உடலைத் தீண்ட உணர்ச்சி இருக்குமாமே
உருவம் மாறி அழகு உதிர்ந்த பின்னும்
ஆசை அனல்தான் உள்ளே வீசுமாமே
அருவம் போலே பின்னிப் பிணைந்து
இன்பத்துப் பாலைப் பருகலாமே; இது
தீரும் இச்சை இல்லை பெண்ணே தீர்ந்திடின்
பூமியில் கல்லும் முள்ளும் தான் மிஞ்சுமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடை ஒரு காதல்

வானமெனும் குடம்
தான் நிரப்பி வைத்திருந்த
தண்ணீரை மழையாய்
வார்த்துக் கொண்டிருக்க

நீமட்டும் நனைந்து
கொண்டு
ஊர்வலம் வருகிறாய்

வயிற்றின் பள்ளத்தாக்கில்
மறைந்திருந்து
எட்டிப் பார்க்கும்
கங்காருவின் குட்டிபோல்

தெருவோர இடுக்குகளில்
நின்று நானும்
எட்டிப்பார்த்தபடி
உன் பின் வருகிறேன்.

மூங்கில் காற்றில்
முகம் கழுவுகிறது
உன் கூந்தல் !
கண்டு ஏங்கித் தவித்தது
என் கண்கள்

மெல்லிய குளிரின்
உரசலின் காரணமா?
அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைத்துளி இட்ட
முத்ததின் காயங்களா?

உன் கண்ணங்கள்
காயத்திலும் பளபளவென
ஒளிர்கிறது

உனைக்
கடந்து போக
எனக்குத் தோன்றவில்லை
கடத்திப் போகவும்
விருப்பமில்லை

காதலித்துக் கொண்டு
இப்படியே
பொடிநடையாய்
போகலாம் என்று
தோன்றுகிறது

தோற்று விடுவேனோ
எனும் அச்சம்
துளி கூட இல்லை

என் கையில்
ஒரே ஒரு குடைதானிருக்கிறது
எனக்குள் நீ நெருங்குவாய்
என்ற நம்பிக்கையில்

ஏ...மழையே ஓயாது பெய்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னெதிரே தோன்றினாய்

உன் பார்வையில்
வெப்பத்தையும்
உன் வதனத்தில்
பேரழகையும்
சுமந்து போகிறாய்

அதைத் தொடர்ந்து
வருகின்றேன்
ஒரு துண்டு மேகமாய்

கூந்தல் கோதி
சிரித்து நிமிர்ந்தாய்
அத்தருணம்
ஒரு மழைக்காலப்
பொழுதை உன்னில்
கவனித்தேன்

அதில் நனைந்திடாது
நடக்கவே
உன்னருகில் நெருங்கினேன்
சேலை நுனியை
குடையாக்குவாய்
என்ற எதிர்பார்ப்பில்

மணித்துளியின்
இடைவெளியில்
உன் மௌனத்தை
உடைத்துச் சிரித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் இறகால்
வருடிய சுகமடைந்தேன்

கண்பார்த்து
வெட்கத்தோடு
மௌனமானாய்
பிறகு திசை தெரிந்த
பயணமாய் நீ புறப்பட்டாய்

உனைக் காதலால்
கவர்ந்து செல்ல
வழிதேடினேன்

ஆனால் நீயோ
கார்மேகம் கலைந்து
சட்டென்று
தோன்றும்
மின்னல் வெளிச்சமாய்

என்னெதிரே தோன்றினாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்குடி

அன்றொரு காலமதில்
        இலை குலை ஆடையாச்சு
சென்ற அந்நாளில்
        நீதி நியாயம் சமமாச்சு
பன்றியும் மானும் தானே
        பசி போக்கும் உணவாச்சு
கொன்றவன் உண்டவன்
        இருவரும் அன்று சமமாச்சு

சமயம் என்ற ஒன்றை
        சிந்திக்க எவனும் இல்லை
கமம் செய்து வந்தவன்
        என்ற அடையாளம் இல்லை
உமதென்றும் எமதென்றும்
        எல்லை போட்டவன் இல்லை
தமதெனச் சொல்லி அன்று
        கொடி ஏற்றியவன் இல்லை

படிப்பேதும் இன்றிப் பாரெங்கும்
        பரவிச் செழித்தவர்கள்
தடியடிச் சண்டைகள் புரிந்து
        தங்களைக் காத்தார்கள்
அடிபட்ட உடல்ப் புண்ணுக்கு
        இயற்கை மருந்து கண்டார்கள்
பிடித்த பாதையிலே போனவர்கள்
        தடையாய் யார்தான் வந்தார்கள்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிவாசி வாழ்ந்து வந்தமுறை
மீண்டும் வந்து சேராதோ?
சாதி என்ற சாக்கடையை; அவன்
அறிந்ததில்லைத் தெரியாதோ?
பாதிகாலத்தில் இந்தப் பாவி நாகரீகம்
பாருக்குள் வந்து புகுந்ததோ?
மீதிக்கால மனிதனின் வாழ்வியலை
நாசமாக்கிச் சென்றதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்திரை...

அந்தக் கனவு
அப்படியேதான்
இருக்கிறது
சேவல் கூவலின்
சத்தத்தில்

கலைந்துபோகும்
கனவல்ல அது!

இரத்தத்துக்கும்
சதைக்கும்
இடையில் தூங்கியபோது
தட்டி எழுப்பிய
கனவு அது!

கூச்சலுக்கும்
கூட்டத்துக்கும்
மத்தியில் நடந்தபோது
இன்னும் எத்தனை காலம்தான்?
என்று கோபத்தோடு
கேட்ட கனவு அது!

செல்லடியின்
சத்தத்துக்கும்
வானூர்திகளின்
இரைச்சலுக்கும்,
பதுங்கிக் கிடந்தபோது
எழுந்திடு... !எழுந்திடு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என உதைத்த
கனவு அது!

மதயானைகள்
மதத்தைப்
பின்பற்றாமல்
மனிதத்தை மிதித்த போது
அன்று ஒரு இனம்
அலறிக் கொண்டு கண்ட
கனவு அது!

எங்கள் தேசத்தாயின்
தேகமெல்லாம்
தீ பிடித்துக் கருகிக்
கொண்டிருந்த வேளை
புகையை விலத்தி

இருமியபடி போதுமடா தமிழா! என
பொங்கிய கனவு அது!

கண்ணீரின்
வெப்பத்தில் வேகியபடி
எங்கள் அன்றைய
பொழுதுகள் போனபோது
பிடரியைப் பிடித்து
சினத்தை ஊட்டிய
கனவு அது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று...!

அமைதி என்ற
ஆயுதத்தின் கீழ்
போலிக் கனவொன்று
உதித்ததால்
கசிந்து கொண்டிருக்கும்
இரத்தத்தை
கண்டுகொள்ளாமல்
நனவெனும் மேடையில்
நாடகம் காண்!

ஓநாய்களின் துப்பாக்கியின் வாயிலை
மோந்துபார் காணாமல்
ஆக்கப்பட்டோரின்
குருதியின் வாசனை
இருக்கும்!

மண்ணின் மடியை
வருடிப்பார்
உன் மரணத்திற்கான
விண்ணப்பம்
விதைக்கப்பட்டிருக்கும்!

தமிழன் எனும் தரம்
தரணியின் தலையில் அகதியாக்கி
தொங்கவிட்டிருக்கு
என்பதை அறியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகதரத்தில் நாங்களாம் !

தாய்த்தேசத்தை
நோக்கிப் புலம்பும் என் கவிதையின் கனவு
இன்னும் அப்படியேதான்
இருக்கிறது!

புரட்சிப் பாதையில்
விடுதலையை
தேடிப் போனபோது
வலியோடு ஆயிரம்
காயங்களைச்
சுமந்து கடந்தபோது
வந்த அந்த கனவு
இன்னும் அப்படியேதான்
இருக்கிறது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை போன போக்கு...

அழ மறுக்கும்
விழிகள்
புன்னகை விரும்பாத
உதடுகள்

போலியாகிப் போன
உறவுகள்
பொய்யாய் வாழும்
அன்புகள்

செழிப்பில்லாத
முகங்கள்
சொல்லமுடியாத
சோகங்கள்

சுதந்திரம் அற்ற
தெருக்கள்
சூதுகளோடு
திரியும் உறவுகள்

துரோகம் புரியும்
நம்பிக்கைகள்
சரித்திரம் அழிக்கும்
கொள்கைகள்

சாதி மதத்தைக்
கொண்டு
மேனி வளர்க்கும்
அரசியல்வாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கொடி தூக்கும்
பல கரங்கள்
போராட மறுக்கும்
சுயநலவாதிகள்

சத்தியமில்லாத
நீதிமன்றங்கள்
வாய்மையே தெரியாத
வழக்கறிஞர்கள்

காதல் இல்லாத
குடும்பங்கள்
களவோடு உறவாடும்
கலாச்சாரங்கள்

இவைகள்
கோடியாண்டு
கொடிகட்டி ஆண்ட
மனித இனத்தின்
இன்றைய நிலவரங்கள்

என்ன செய்வது ?

நவீன மாற்றங்கள்
மானிடத்தின்
முதுகில் மாத்திரமல்ல
வாழ்வியலின்
பல பாகங்களிலும்
சவாரி செய்வதன்
காயங்கள்தான்

இந்த மாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிட ஆளுமை

சோர்வு எதற்கு மனமே?
சொல்வதைக் கேள் - பின்
பிறக்கும் வழிகள் தினமே

இறையை வணங்கு - பின்
குறையில்லா வாழ்வை
வழங்கும் அவனருளே

வென்றே நீ நிற்பாய்
என்றும் நீ நிமிர்வாய்
நன்றே நகரும் பயணம்

அழுது போவதும் - இங்கு
சிரித்து வாழ்வதும்
இறைவன் எழுதிய காவியம்

பொறுத்து வாழ்ந்து
மண்ணில் பெருமைதேடு
தெய்வமும் உனை வணங்கும்

பொறாமை திமிர் அடக்கிப்
பற்றுக் கொண்டால்
உலகம் உனை மதிக்கும்

பண்புடன் வாழ்ந்து
அன்பு கொண்டால்
மானிடம் உனை வாழ்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் புரிந்தவன் மனதைப்
பொறுத்துப் போ
மிருகமும் உனைப் போற்றும்

செய்த நன்மையை
வெளியே சொல்லி
தெய்வ மதிப்பை இழக்காதே

கொடுக்கும் மனமே
உனக்குள் இருப்பின் கடவுள்
இருப்பான் உனக்குள்ளே...

## வரலாறு என்னாகுமோ?...?

கண்ணீர் வடிப்பதால் இங்கு
கரைசேர முடியுமோ ?- விழுந்து
கிடந்து கொடி பிடிப்பதால்
துளி நிலமாவது கிடைக்குமோ ?

என் மொழி பேசினால்
எனக்கு வேலை இருக்குமோ ?
வரும் காலமதில் என்
மொழி இங்கு சுவாசிக்குமோ ?

ஆதிகாலத்தின் மூத்தகுடி
நாம் இல்லையென்று ஆகுமோ ?
ஆன்றோரும், சான்றோரும்-நாம்
இல்லையென வரலாறு எழுதுமோ ?

சீனாநாட்டு வால்மீகி என்
நிலத்தில் வந்து பிறப்பானோ ?
அவன் இலங்கையின் ஆதிக்குடி
சிங்களமென மாற்றுவானோ?

ஆத்திசூடியும், திருக்குறளும்
பள்ளிகளில் ஒலிக்குமோ?
சீனாவும், சிங்களமும் - இனி இங்கு
நித்தமென்றாக்குமோ ?

சோழர்பரம்பரை எனும் பெருமை
காற்றோடு கரைந்து போகுமோ?
வன்னியன் வம்சம் நாமென்ற
திமிர் அடங்கி முதுகு கூனுமோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்படை கண்ட எமது தரம்
பொய்யென ஆகுமோ?
முப்படை வாழ்ந்த நிலம்
விகாரையால் நிரம்புமோ?

மீண்டும் கலவரங்கள் வெடித்துத்
தீயிட்டுக் கொழுத்துமோ?
நீதி, நியாயம் கேட்டெழுந்தால்
உயிரெடுத்து உதைக்குமோ ?

உதவியென்று வந்த வெளிநாடும்
சுயநலத்தோடு இறங்கியதோ ?
தன் அரசியல் ஆசனத்தை - ஆள
வேரூன்றி ஆட்சி கண்டதோ ?

அண்டை நாட்டுச் சதியும் எமது
மண்டை ஓடுகளைக் கேட்டதோ ?
சண்டையில் பங்கெடுத்த வல்லரசு
கண்டும் காணாதது போல் நடித்ததோ ?

தமிழா துரோகம் உன் இருப்பிடம்
முற்றிலும் பற்றிக் கிடந்ததோ ?அந்த
தர்மம் தாமதமாகத்தான் வெல்லுமோ ?
அதுவரை தமிழினம் இருக்குமோ ?

தமிழனா? சீனனா? சிங்களனா?
யார் நாம் என்ற கேள்வியோடு
எதிர்கால்ச் சமுதாயம் தன்கூட
தானே யுத்தம் தொடங்குமோ ?

அழுது அழிந்து போகும் மரபோடு
என் தமிழீழ வரலாறு மறையுமோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ட நொடியில்

காற்றலையின்
தடவலில்
பறக்கும்
பழுத்த இலைபோல்
உன் கண்ணசைவால்
பறந்து போகிறேன்

வறண்டு போன
நிலத்தில்
தவறிப் பிழைத்த
செடியாய்

வாழ்வுக்கும்
தாழ்வுக்கும்
நடுவில் முளைக்க
வைத்திருக்கிறாய் எனை

பாறையில் படர்ந்த பாசியின்
பசுமையாய்
மனசோரம்
இலேசாக இருக்கிறது

நீ கிணற்றடியின் ஈரம்!
எனைக் காயாது
வைத்திருக்கிறாய்

ஊரோர வேலிகளின்
வெளியே எட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் பூக்களைக்
கடந்து போவதுபோல
சுலபமல்ல

உனைத்
தாண்டிப் போவது!

நீ தரமான
தமிழவள் சகியே
கடவுளையும் மனிதத்தையும்
தழுவிப் பிறந்தவள்

நான் தவம் செய்யாமல்
வரமாய்க் கிடைத்த
உனை எனக்குள் பதுக்கி
வைக்காமல் பறக்க
விட்டுவிடுவேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலாகி...

உனைத் தினம்
நினைக்கும் அளவில் எனை ஏனடி
வைத்தாய்?

வலிதெரியாத
இந்த நோயை
எனக்குள் எப்படிப்
பரப்பிவிட்டாய் ?

தூக்கத்தைக்
கெடுத்து
உயிரை உரசும் ஏக்கத்தை
ஏனடி விதைத்தாய்?

உன் இரு புருவங்களுக்கிடையில்
எனை
எப்படி அடைத்தாய் ?

என் கனவின்
பிரதேசம் யாவும்
மழையாகி எனை
நனைத்தாய்

காற்று இல்லாத
மண்டலமாய்
என் உலகை மாற்றி
மிதக்க விட்டாய்

இறக்கைகள் இன்றி
எனை உன் வானத்தில்
பறக்கவிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைகால
வேளையிலும்
எனைக் குளிர
வைத்தாய்

குளிர்கால
வேளையில்
எனைக் கரைய
வைத்தாய்

இலையுதிர்
காலத்தில்
எனைத்
துளிர்க்க வைத்தாய்

மூன்று வேளை
பசியைத் தள்ளி
வைத்தாய்

முப்பொழுதும்
உனை
நினைக்க வைத்தாய்

எப்பொழுதும்
தொழ வைத்துப்
பேரின்ப வெளியில்
எனைத் திளைக்க
வைத்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் குறும்பு

கண்டகண்ட
நேரமெல்லாம்
கண்டகண்ட
இடத்தில்
எவரையும் கவனியாது
எனைக் கட்டிப்பிடி!

மடிக்கணனி
பார்த்தபடி
ஓரக்கண்ணால்
எனைப் பார்த்து
ஒரு மெல்லிசை
பாடிமுடி!

பூனை போல
பதுங்கிவந்து
என் பின் நின்று
கழுத்தின் இடையயில்
மெதுவாய்க் கடி!

வீட்டின் நடுவே
இருந்தபடி
அங்கே இங்கே
உலாவும் எனை
இரசித்து ஒரு
கவிதை படி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளானாலும்
இந்த அந்திப்பொழுதின்
உலாவலில் காதலியாய் நடி!

தனிமையில்
ஒரு பயணம்
இருவரும் போகையில்
தவறு செய்தால்
தடியெடுத்து அடி!

குத்துப்பாட்டு
போட்டுவிட்டு
குத்தாட்டம்
என்னோடு ஆடடி!

ஆயுதம் இல்லாத
தேசத்தில் வசித்து
ஆயுள் முழுதும்
என்னோடு வாழ்ந்து
செத்துமடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினேகிதி...

ஒரு மெல்லிய
புன்னகையின்
வழியே என்
மொத்தத்தையும்
அள்ளிச் சென்றாய்

என்றோ ஒருநாள்
திருப்பித் தருவாய்
என்ற தைரியத்தில்
நானும் உன் கூடப்
பயணிக்கிறேன்

இசை கேட்கிறாய்
இயற்கையை இரசிக்கிறாய்
கவிதைகள்
வாசிக்கிறாய்

நீ...இயற்கையாகவே
இருக்கிறாய்!

எனைப் பத்திரமாய்
வைத்துக்கொள்!
உன்கூடச் சேர்ந்து
நானும் இதையெல்லாம்
அனுபவிக்க வேண்டும்

நீ பெற்ற இன்பம்
நானும் பெற அனுமதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆயுளும்
இனிக்கட்டும்

சினேகித்துவிட்டேன்
கொஞ்சக் காதல் கலந்து வைத்து
உன்னோடு எனைக்
கொண்டு போ என் அந்த இறப்பு வரை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லமே செல்லம் என்றாயடி

வாடி என்னவளே!
வந்தெனை
டா! போட்டுக் கூப்பிடு!

என்ன செய்வாயோ
ஏது செய்வாயோ
தெரியாது எனை
அழ வை!

பின் செல்லமாய்க்
கூப்பிட்டு உன் மார்போடு அணை!

தொடர்ந்தென்னை
தொந்தரவு செய்!

எனைக் காதலிக்கவில்லை
என்று சொல்லி
ஒருநாள் ஏமாற்று

மறுநாள் என் முகவரிக்கு
கடிதம் எழுது
நீ எனைக் காதலிப்பதாய்

நிலாக் காட்டி
சோறு ஊட்டு
உன் மடியிருத்தி
மெல்லிய விரலால்
என் முடி கோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் மீறித்
தூங்கினால்
முத்தமிட்டு
எனை எழுப்பு

வெளியே கூட்டிப்போ!
கேட்பதெல்லாம்
வாங்கித்தா
அடம் பிடித்தால்
அதட்டு!

என் விழிக்கண்ணாடி
பார்த்துப் பொட்டுவை
செல்லச் செல்ல
வார்த்தைகள்
சொல்லிச் சொல்லி
எனைக் குளிப்பாட்டு

அழகான கவிதைகள்
கேட்க வேண்டும்
என் கூட மணிக்கணக்காய்
கதைத்துக் கொண்டிரு

சங்கீதம் கேட்டுத்
தூங்க வேண்டும்
என் செவியோரம்
வந்திருந்து சிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வேண்டும்
எங்கே? என் விழிகள் காண
உன் விம்பத்தைத் திருப்பு

படுக்கையில்
தலை சாய
தலையணை வேண்டாம்
மடி கொடு

பொய் சொன்னால்
கோவித்துக் கொள்
உண்மை சொன்னால்
நேசித்துக் கொள்

இரவும், பகலும்
என் பக்கமிரு
எப்பொழுதும்
என் உச்சி மோந்து
முத்தமிடு!

என் வாழ்க்கைக்கு
உனை வாரிக்கொடு
வாடி! வந்தென்னை
உன் வாழ்க்கைக்கு
வாரி எடு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி...

காமத்தை மட்டும்
நிரப்பிக் கொண்டு
பூமியே நீயும்
சுற்றாதே

காமநஞ்சை
சுமந்தபடி
காற்றே இங்கு
வீசாதே

சதையைச் சதை
தீண்டிச் சுவைக்க
உயிரை எடுப்பது
சரிதானோ?

கண்ணீர்த் துளியில்
உயிரின் துளியை
கலப்பதுதான்
கலவையோ?

குழந்தையைக்
கூடக் குதறும்
கூட்டம் பாரில்
உண்டு பாராயோ?

அட! அதன் பெயரும்
காமம் என்றால்
கழுத்தை அறுக்கத்
தோன்றாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடும் காமஉலகைக்
கொழுத்தித்
தாண்டவம்
ஆடிடக் கூடாதோ?

கடவுள் தருவான்
தண்டனை என்று
உரக்கச் சொல்வது
அஞ்ஞானம்

இறையின் பெயரைச்
சொல்லி அழைத்து
இங்கு நடப்பதெல்லாம்
அநியாயம்

இரைதேடி அடித்து
வயிற்றை நிரப்பும்
காட்டுக் கூட்டம்
மேலன்றோ

உடல் பசியைப்
போக்க உயிரை
எடுக்கும் இக்காம
உணர்வு வலியன்றோ...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தீபனின் பன்னிருநாள்.

தீபகங்கள் ஏற்றி வைத்து
மலர்கள் தூவி வைப்போம்-தியாகத்
தர்மத்தை ஏந்தி வைத்து
அடிமையை அறுத்து வைப்போம்

ஆளுமையை ஊண்டி வைத்து
அறநெறி கூட்டி வைப்போம்-எதிரி
வலுவை அழித்து வைத்து-தியாகத்
திரியைத் தூண்டி வைப்போம்

நல்லூரை நினைவில் வைத்து
திலீபனை மனதில் வைப்போம்
சொல்லூறும் தமிழால் பாடிவைத்து
வள்ளலை வணங்கி வைப்போம்

வல்லமையை கருத்தில் வைத்து
போராளியைப் போற்றி வைப்போம்
பசிப்பதைத் தவிர்த்து வைத்த
புனிதனை மனதில் வைப்போம்

துளிநீரைக் கூட தள்ளி வைத்த
வீரனை உயிரில் வைப்போம்
விழிநீரை சொரிந்து வைத்தே அந்த
பன்னிருநாளை பணிந்து வைப்போம்

பட்டினியால் கோரிக்கை வைத்து
மரணித்தவனை நீதியில் வைப்போம்
பார்த்தீபனை கோவிலில் வைத்தே
தினமும் பூஜிக்க வைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி

தமிழீழமா?
இலங்கையா?

உயிர் வாழ உணவு உற்பத்தியை
வளப்படுத்து
பிறகு எது உன்
தாயகம் ?
என்பதைப்பற்றி
விவாதிக்கலாம்

பிராணவாயு இல்லாத
கிரகத்தில் உன்னால்
பிழைக்க முடியுமா?

அரசநீதி தெரியாதவன்
தர்ம நெறி தவறியவன்
தரமற்ற மந்திரிமார் -இதில்
ஆட்சி எங்ஙனம் சிறக்கும்?

அழிவை அன்றி
ஆக்கத்தையா
அமைக்கும்?

நாட்டின் வளத்தை
நாடுகடத்திவிட்டு
எதிர்காலத்
தலைமுறையின்
தலையில் வறுமையை
எழுதிவிடுவது தகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்கூரையின் கீழ்
கூட்டுக்களவாணிகள்!
சுதந்திரம் எடுத்தோம்
எனும் தலைப்பில்
நாட்டை சுடுகாடாக்கிச்
சுவைத்தார்கள்!

மனித உரிமை மீறி
உடமைகள் இல்லாது
அழித்தவர்களை நம்பி
நாட்டின் அரசபீடத்தை
எங்ஙனம் ஒப்படைப்பது?

வளர்ச்சி அற்று
வறண்ட மண்டலமாகி
இன்று கிளர்ச்சியின் கீழ்
கிளைவிட்டுப்
புரட்சியாகிப் போனது தேசம்!

அராயக ஆட்சியின்
காக்கிச்சட்டைகளோடு
மோதிக்கொண்டு
கோட்டையின் வாசலில்
கால் வைத்தாலும்

நசுங்கிப் போன
எளியவர்க்கத்தின்
பொருளாதரச்சுமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிச்சை எப்படி
அவிழ்ப்பது...?

இனி இயற்கையின்
தாய்வீடாய்
இலங்கை இருந்ததாக
வரலாற்றில்தான் காணமுடியுமோ?
என்னமோ?

நரிகளும் ஓநாய்களும்
கைகோர்க்குமாயின் நாடு
காணாமல் போகும்!
இறையாண்மை இறக்கும்!

ஆகவே
கற்றுத் தெளிந்த
தலைமுறையே
கோட்டையின் கூரையில்
ஏறிநின்று கூவுவது
வெற்றி அல்ல!

இனி நீங்கள் புதிய ஆட்சியை நிறுவுங்கள்!
அரசபீடத்தில் ஏறுங்கள்!
வீழ்ச்சி இல்லாத ஒரு ஆளுமையை
கையாளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாத காயங்கள்

அன்புகள் ஆயிரம்
    ஆறுதல் கொடுக்க
அம்பாய் சிலரிங்கு
    குத்திக் கிழிக்க
அகமும் இங்கே
    அழுது வெடிக்க
அனலாய் வேதனை
    உயிரை வாட்டுதே

அனைத்தும் இங்கே
    பொய்யில் அடங்க
அன்னையின் நிழலை
    இங்ஙனம் உயிர் தேட
அடிமையின் உணர்வில்
    ஆழ்மனம் வேக
அரவணைக்க யாரென
    மனமது அலையுதே

அடிதரும் வலிக்கோ
    மருத்துவம் இருக்க
அனாதையாய் இங்கொரு
    வாழ்வு ஏன் தவிக்க?
அள்ளித் தழுவ இங்கு
    கரங்கள் இருக்க
அல்லும் பகலும் ஏன்தான்
    கண்ணீர்த் துளிகளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையின் பொருளை
அறிய ஆள் இங்கில்லை
அடங்கிய பிறகிங்கு
அழுவது தேவையில்லை
அன்பெனும் நதியில் பல
வற்றாத காயங்கள்
அந்த இறைவன் வகுத்த
வாழ்வில் பல மர்மங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடலும் முள்ளிவாய்காலும்

சீர் கெட்டுப்போன
அரசியல் குளங்களை
இனியேனும்
தூர் வாருவோம்

அடுத்த தலைமுறைக்காய்
சிந்தனையில்
மாற்றங்கள் செய்வோம்

துரத்தியடித்ததை
வெற்றியெனக்
கொண்டாடும்
அரசினத்தை
எப்படி சொல்லிப் போவது?

தகுதி கொண்ட தோள்களில்
ஏற்றிவிடுவோம்
நாடாளும் தரத்தை!

போர் முடித்து
வீழ்த்திவிட்டோமென்று
எண்ணியவருக்கு
எச்சரிக்கை செய்வோம்

உறங்கிக் கொண்டிருக்கிறோம்
எப்போது வேண்டுமானாலும்
விழித்துக் கொள்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது
காலிமுகத்திடலாகவும்
இருக்கலாம்
முள்ளிவாய்க்காலாகவும்
இருக்கலாம்!
அமைதியின்
குணம்
அரசியல்வாதிகள்
அறியாததா?

இனி ஒரு வழி செய்வோம்
இனமாய் இணைந்தால்
குருதி கசியும்!

இனங்களாய் இணைந்தால்
உரிமையோடு
தலைநிமிரலாம்!

மதமாய் இணைந்தால்
ஆயுதங்கள் தூசு தட்டப்படலாம்
மதங்களாய் இணைந்தால்
மனங்கள் புத்துயிர் பெறலாம்!

கோபங்கள் தணிவது
சுதந்திர
வாழ்வியலின்
விடியலில் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம்தான்!
ஆனாலும்
பதட்டம் வேண்டாம்
நேர்மையும், தர்மும்
இணைபிரியாது
இணைந்து கொள்வோம்!

நேராய் வளரும் மரத்தையும்
நேர்மையாய் வாழும் மனிதனையும்
வாழவிட்டு வாழ்த்திய
சரித்திரமில்லை

நல்லதே நடக்கும்

நம்பிக்கையில் பயணிப்போம்
நம்பிக்கை சிதையுமானால்
போராடக் கற்றுக் கொடுப்போம்
வரும் அடுத்த தலைமுறைக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயில் இறங்கிய சீதை

முனிவர்கள் முக்தியடையும் முன்னே
வாழ்ந்த கதை யாம் அறிந்திருப்போம்
இனிவரும் தலைமுறை மட்டும் என்ன
பக்தி கொண்டா வாழ்ந்திடப் போறார்?

இந்த நொடிப் பொழுதை இதயத்தில் ஏந்தி
இல்லறத்தில் வைத்துக் கொண்டாடிவிடு
இந்த இரவை அரவணைத்துப் பன்னிரண்டு
காட்டும் முட்களாக மாற்றிவிடு

கிளிகள் உண்ணும் கனிவகை யாவும்
கன்னியிவள் அங்கத்தில் காய்த்திருக்கு
உளியென நீ மாறி இவளை சிலையெனச்
செதுக்கு செவ்வாய் உனக்கெனத் திறந்திருக்கு

முத்தமென்றொரு குளத்தின் உள்ளே
மூச்சடக்கி முத்தைத் தேடு
நடுநிசியில் சத்தமிடாது வரும் கள்ளன் போலே
ஊடலின் வழியே வந்து முற்றும் திருடு

புல்வெளி தேடும் பட்டாம்பூச்சி போலே
கட்டில் வெளியில் எனைத் தேடு தலைவா
சில்லென வீசும் தென்றலின் இனமாய்
சொல் சுவைத்துக் கவிதை பாடு புலவா

கொலை செய்து பின் பிழைக்க வைக்கும் இந்த
வித்தையை எங்ஙனம் கற்றாய்
இலையில் வழியும் மழையின் நீரை
என் நுனிமூக்கில் எப்படி வரவைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லும் பகலும் எனைக் கடத்தி
அகிலம் தாண்டிக் கொண்டு செல்வாய்
வெல்லும் உந்தன் திறமை தாண்டி;
தீயில் இருந்தென்னை மீளச் செய்வாய்

தொல்லை செய்து எனை நீதான்
தொலைத்திட எண்ணாதே; இன்னும்
எல்லை இல்லா இன்பம் கண்டு
திழைத்திட எண்ணுதடா என் மனமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைம்பெண்

ஏனோ தெரியவில்லை
எனை அழ வைக்கிறாய்
என்னவோ புரியவில்லை
எனை அழ வைக்கிறாய்

அறுந்த கொடியில்
பூப் பூக்க வைக்கிறாய்
கறைபடிந்த நிலவை
கழுவி வைக்கிறாய்

இருண்ட வீட்டில்
வெளிச்சம் வைக்கிறாய்
தனியொரு இதயத்தில்
துணை வைக்கிறாய்

வெள்ளைச் சேலையில்
நிறம் பூச வைக்கிறாய்
காய்ந்து போன செடியைத்
துளிர்க்க வைக்கிறாய்

வற்றிய வாலிபத்தை
தேற்ற வைக்கிறாய்
வாடிய மலர்வனத்தில்
பசுமை வைக்கிறாய்

சமயசடங்குகள் யாவையும்
கடக்க வைக்கிறாய்
வேத சாஸ்திரங்களை
நீ மீற வைக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வற்றாத நதியென
எனை ஓட வைக்கிறாய்
இந்தச் சமுதாயத்தை நீ
எதிர்க்க வைக்கிறாய்

ஆறறிவுச் சந்தையில்
எனை ஏற்றி வைக்கிறாய்
நான் வாழத் தகுந்தவள்
என விழா வைக்கிறாய்

மறுமணம் என்றொரு
மாற்றத்தை வைக்கிறாய்
இந்த மானிடர் மத்தியில்
வியக்க வைக்கிறாய்

உடன்கட்டைப் பழமையை
பல் இளிக்க வைக்கிறாய்
என் உணர்வுக்கு மதிப்பளித்து
நீ உள்ளொளி வைக்கிறாய்

மண்ணும் பெண்ணவள்
என்று பாட வைக்கிறாய்
பழந்தமிழ் மூட பழக்கத்தை
நீ தீயில் வைக்கிறாய்

ஏனோ தெரியவில்லை
எனை அழ வைக்கிறாய்
என்னவோ புரியவில்லை
எனை அழ வைக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணமானவள்

சொல்லத்தான் நினைக்கிறேன்
உள்ளத்தில் உறவொன்றை
இணைக்கிறேன் - என் காதலை
வெல்லத்தான் வேண்டுமென்று
நானும் மெல்லத்தான் பாடுகிறேன்

அன்னத்தின் நடையினைக் கொண்ட
அந்த மாதுவின் எண்ணத்தால்
தவித்தே நானும் என்னத்தை
எழுதுவேன் தமிழே நீ கூறு! - அவள்
வண்ணத்தின் வாக்கியமென நீ பாடு

விழி அசைவில் நூறுகவி சொல்லும்
பாவை - என் வழிப் போக்கில்
எனைத் தடுமாற வைத்த பார்வை
கிளிப் பேச்சுப் பேசி எனை
கிறங்கிட த்தான் வைத்தாள் கோதை

உறங்க நினைத்தாலும் இமைகள்
மூடத்தான் முடியவில்லை-மறக்க
முயன்றாலும் மனமும் இடம்தான்
கொடுக்கவில்லை -அவளுக்குப் பின்
வேறு எவளையும் பிடிக்கவில்லை

சிரித்தால் சிந்தை குளிரும் சிறப்பென
சித்தரும் போற்றித்தான் பாடுவார்
பக்தி முத்தி மலையேறிய முனிவரும்
மங்கையா ? இல்லை! இவள்
சுந்தரக் கவியென்றே கருதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்மகள் மீது கொண்ட - என்
தேயாக் காதல்நிலாத் தன்னை - அந்த
பூமகள் வானம் தன்னில் பிரகாசமாய்தான்
ஒளிக்கவிட்டுப் பரவசமாய்தான்
வாழ்ந்திட இன்னும் நான் வாழுகிறேன்

என் வழியில் வந்த முத்தழகி இவள்தான்
மூத்த மொழி முத்தமிழின் மகள்தான்
கட்டழகிப் பருவம் எழில்வண்ணக்கலைதான்
காதல் வித்தைகளை வைத்திருக்கும்
அத்தையவள் தந்த கொத்துமலர் அவள்தான்

வட்டநிலா முகம் கொண்ட அழகான
பொட்டுநிலா புருவத்தில் பூத்திருக்க
இளையநிலா விழிவிட்ட அம்பு
எந்தன் இதயத்தைத் துளைத்ததென்ன
வண்ணநிலா அவள் வானத்துத் தேவதையோ

தொடாமல் போன தென்றல் என் வாசல்
தேடிவந்து தீண்டிப் போனதென்ன
விடாமல் என் செவிகளில் - அந்தப்
பைந்தமிழ் பாடல்கள் ஒலிப்பதென்ன
கெடாது என் காதல் செடி மலர்வதென்ன

காதலொரு யுத்த பூமியென்பேன் - அங்கு
மலர்களே ஆயுதமென்பேன் - அவள் காதலாகி என்
வாசல் வந்தாள் ஆயுள் புனிதமென்பேன் அவள்கூட
வாழ்ந்துவிட்டுச் செத்தால் இன்பமென்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

ஒன்றுமே
பேச வேண்டாம்
இப்படியே
என்னருகில் இரு

எனக்கு என்ன
வேண்டுமென்று கேள்!

என்ன? மிஞ்சிமிஞ்சிப்
போனால்...

ஒரு தொடுதல்!
ஒரு இறுக்கம்!
ஒரு தோழாண்மை!
என் மீதான அக்கறை!
எனக்கான உன் அன்பு!
முதலில் இட்ட முத்தம்!
அது இறுதிவரை...

வேறென்ன?

அ...
பக்கத்தில்
மொழியே இல்லாமல்
மௌனம் பரப்பிய
ஒரு பார்வை

இடுகாடு போகும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்ந்து
போகாத அணைப்பு!

மூங்கிலின்
உறுதி கொடு
வேம்பின்
மருத்துவம் கொடு

பழைய சோற்றின்
பலம் கொடு

அம்மா
தவறிவிட்டாள் அல்லவா?
அந்த தாய்மையின்
தாற்பரியம் கொடு

இருட்டின்
சூழலில்
ஒரு மெல்லிய
மெழுகுவர்த்தியின்
வெளிச்சம் போதும்

அதில்
உன் முகத்தை
மாத்திரம்
என் விழிகள்
வாங்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வாழ்க்கை
உனக்கானதென்று
சுயநலமாக கருதாதை,,,!
அது முற்றும்
எனக்கானதாக வேண்டும்...

தீ தானாக
எரியாது அல்லவா?
காற்றின்
கரிசனையும்
கொஞ்சம்
அவசியம் தானே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்து போன தடயங்களைத் தேடிப் போவதைவிட, புதிய பாதையை உருவாக்கி அதில் பயணிப்பதுதான் பயன் தரும். தடயங்களைத் தேடிப் போனால், அதை தேடிப் போனவர்கள் தொலைந்து விடுவார்கள் அல்லது தோல்வியடைந்து விடுவார்கள். காயங்கள் கற்றுக் கொடுக்கும் பாடமானதுதான் வரலாறாக மாறுகின்றது. ஆகவே வரலாறுகளை உள்வாங்கி வாழ்க்கையை வரவேற்று, அடுத்த தலைமுறைக்கு எங்கள் வரலாற்றை கடத்திப்போவோம்.

- வயவை லம்போ

9 786246 601720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org